93

Registered No. M. 1368

ஓம்

# தருமசீலன்.

5 - APR 1923

பத்திராதிபர்: தி. ஆதிநமினர்.

புத்தகம் 5. } துந்துபிஹு மாசிமு 1923-ஹு பிப்ரவரிமு { சஞ்சிகை 11.

## விஷய சூசிகை.


| | விஷயம். | பக்கம் |
|---|---|---|
| 1. | நீதிச் செய்யுட் சிந்தாமணி | ... 241 |
| 2. | கொற்றவனறிதல் உற்றிடத்துதவி | ... 242 |
| 3. | க்ஷத்ர சூடாமணி | ... 243 |
| 4. | பதிவிரதா தருமம் | ... 250 |
| 5. | மாணவர்பக்கம் | ... 252 |
| 6. | கொலாசஸ் என்னும் வெண்கல வுருவம் | ... 255 |
| 7. | கேட்காமல் பணங்கொடுப்பதே கௌரவமாம் | ... 258 |
| 8. | தருமோபதேசம் | ... 261 |
| 9. | புதிய நாகரீக விவேகிகள் | ... 262 |
| 10. | விநோதகதைத் திரட்டு | ... 263 |
| 11. | தகவுரை | ... 264 |


வருஷசந்தா ரூபா 1.] 1922-23. [தனிப்பிரதி அணா 0-2-0

DHARMASEELAN PRESS. MADRAS

# தருமசீலன் விளம்பரம்.

இது, ஒவ்வொரு தமிழ் மாதந்தோறும் வெளிவரும். இதில், பொது நீதிகள், சங்கமருவிய நூல்களில் வெளிவராதநூல்கள், அறிவை விருத்தி செய்யத்தக்கபல நீதிகள், வியாசங்கள், பலவிநோதக் கதைகள், நாவல்கள், பொது வர்த்தமானங்கள்முதலிய பல அரிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

## சந்தா விவரம்.

வருஷம் 1-க்குத் தபாற்செலவு உட்பட இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய விடங்களுக்கு ரூபா 1—0—0

பீனங், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா முதலிய விடங்களுக்கு ரூபா 1—4—0; தனிச் சஞ்சிகை விலை அணா 0—2—0.

## கவனிப்பு.

1. சந்தாதாரராகச் சேருகிறவர்கள் தங்கள் முழுவிலாசத்தையும் சுத்தமாக எழுதியனுப்ப வேண்டும்.

2. முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும்; ஒரு வருஷத்துக்குக் குறைந்து பத்திரிகை கொடுக்க முடியாது; ஒரு வருஷத்துக்கிடையில் சந்தாதாரர்கள் சேர்ந்தால் அவர்களுக்கு முந்தின மாதங்களின் சஞ்சிகைகளும் சேர்த்தனுப்பப்படும்.

3. சந்தாதாரர்கள் கடிதமெழுதினால் தங்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

4. இப்பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோர் கடிதத்தில் ஒரே பக்கத்தில் சுத்தமாக எழுதியனுப்பவேண்டும்; தூஷணையான விஷயங்களை எழுதலாகாது; பொது நன்மையான விஷயங்களே எழுதவேண்டும்; விஷயங்களைத் திருத்திக்கூட்டவும் குறைக்கவும் நமக்குப்பாத்தியமுண்டு; வியாசக்காரர் அபிப்பிராயங்கள் நம்மைச் சார்ந்தவைகளல்ல; விஷயதானஞ் செய்வோர் தங்கள் முழு விலாசத்தையும் எழுதவேண்டும்.

## விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒருமாதத்திற்கு | ரூபா | 10—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூபா | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூபா | 3—0—0 |

விளம்பரத்தொகையை முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

தி. ஆதிகேசினர், "தருமசீலன்" ஆபீஸ்.

26. ஆச்சாரப்பன் தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

# தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

புத்தகம் 5 } துந்துபி௵ மாசி௴ 1923௵ பிப்ரவரி௴ { சஞ்சிகை. 11

## நீதிச் செய்யுட் சிந்தாமணி.

---

### ஆவதும் போவதும் பழவினைப்பயனால் நேருமென்பதும், தீயோரியல்பும், நல்லோரியல்பும்.

"ஆம்பொருள்க ளாகுமது யார்க்குமழிக் கொண்ணாப்
போம்பொருள்கள் போகுமவை பொறியின்வகை வண்ணம்
தேம்புனலை நீர்க்கடலும் சென்றுதா வின்றே
வீங்குபுனல் யாறுமழை வேண்டியறி யாதே."

(இ-ள்.) "உலகத்தில் விருத்தியடையத்தக்க பொருள்கள் விருத்தியடையும்; போகத்தக்க பொருள்கள் போய்விடும். இங்ஙனம் நிகழ்வதும், யார்க்கும் அழிக்கவொண்ணாததுமான அச்செய்கை, இருவினைகளின் கூறுபாட்டின் இயற்கையாகும். இன்னும், உப்பு நீரையுடைய கடலும் உலகத்தேவர்க்கு இனிய நீரைத்தருதல் ஒருபோதுமில்லை; மேகமானது, ஆற்றுக்கு மிக்க நீரைக்கொடுக்க விரும்பியறியாது; இனிய நீரைக்கொடுத்தல் அதன் இயற்கைக்குணம்; இவைபோல் தீயோர் உலகத்திற்கு நன்மை செய்யவறியாது தீமையையே செய்து கேடடைவர்; நல்லோர் இயற்கையாகவே நலம்புரிந்து சிறப்புறுவர். ஆதலின், அறிஞர், ஆக்கமும் கேடும் வினைகளின் தன்மையால் நிகழ்வனவென்று அவற்றிற்கு மகிழ்தலும் வருந்தலும் செய்யாது சமசித்தத்தோடிருத்தல் வேண்டும். தீயோர் செய்யும் தீங்கிற்குப் பிரதிதீங்கியற்றாமல் அவர்தாமே கெடுவரென்று மனதைச் சமாதானப்படுத்தி எப்பொழுதும் எவர்க்கும் இனிமையே செய்யவேண்டும்" என்பதாம்.

(வி-ரை.) பொறி-எழுத்து; அது தலையெழுத்தாகிய விதியெனப்படும்; இது பூர்வ வினைகளால் ஏற்படுவதாதலின் அவற்றை விளக்கி நின்றது. நல்வினையால் ஆக்கமும், தீவினையால் கேடும் சம்பவிக்கும். வகை-கூறுபாடு. வண்ணம்-இயற்கை. கடல் என்றும் உவர் நீரையே கொடுத்துக் கொண்டிருத்தல்போல தீயோர் தீமைகளையே புரிந்து கொண்டிருப்பர்; எதனாலும் அவர் இயற்கை மாறாது. ஆதலின் அவரைப்பற்றிச் சிந்திக்காது விட்டால் பின்னர், அவர்தாமே கேடுறுவர். பின்னிரண்டடிகளும் எடுத்துக் காட்டாக அமைந்தன. யாறுமழை-நான்காம் வேற்றுமைத்தொகை.

(சீவகசிந்தாமணி 848.)

---

# தருமசீலன்.

துந்துபிஸ்ரீ மாசிமீ.

"கொற்றவனறிதல் உற்றிடத்துதவி."

இதன் பொருள்:—"கொற்றவன்-அரசன், அறிதல்-(தனக்குரியதாக) ஆராய்ந்தறிந்து கொள்ளத்தக்கது, உற்றிடத்து-(போர்வந்து) பொருந்தியவிடத்து, உதவி-(படைத்) துணையாம்" என்பதாம்.

அரசனுக்கு அவசியமாக வேண்டியவற்றுள் சிறந்தது படைத்துணையாம். படைத்துணை யிருந்தால் எத்தகைய பகைவரிடத்தும் வெற்றிகொள்ளும் ஆற்றலுண்டாகும். அதனல் அரசும் செல்வமும் எப்பொழுதும் நிலைத்து நிற்கும். அரசன் எவ்வளவு சுயபலமுடையவனுயிருந்தாலும் அவனுக்குப் பக்கப்படைத்துணை யில்லாவிடின் போரில் அவன் வெற்றி யடையமாட்டான். அதனுல் அவன் அரசும் சுயபலமும் நிலைப்பதரிதாகும். படைத்துணை யிருந்தால் வலியற்றவனும் ஜெயங்கொள்வான். இது,

"அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்"

என்னுந் திருக்குறளானு முணரப்படும். இது பற்றியே ஔவையார், அரசர் கொள்ளத்தக்கது படைத்துணையே என்னும் இந்நீதியை வற்புறுத்திக் கூறினர்.

இன்னும் திருக்குறளாசிரியர், இறைமாட்சியில்,

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு"

என்னும் செய்யுளில், அரசர்க்கு மற்றவற்றுளெல்லாம் படைத்துணையே சிறந்ததென்பதைப் படையென்னும் வாக்கியத்தை மூன் வைத்ததனல் விளக்கிக் காட்டி யிருக்கின்றுர்.

ஆதலின், அரசுரிமைக் குரியாரெல்லாரும் இந்நீதியைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும்.

அறிதல்-ஆராய்ந்து கொள்ளுதற் பொருளில் நின்றது. உற்ற இடத்து என்பது உற்றிடத்து எனத் தொகுத்தலாயிற்று.

இனி இச்சூத்திரத்திற்கு, "அரசனை அறிந்து பழகி யொழுகுதல், துன்ப முற்றவிடத்தே உதவியாகும்" எனப் பொருளுரைப்பது மூண்டு. (திருவருட்சகாயம்.)

"க்ஷத்ர சூடாமணி."

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-9-பக்கம்-204)

விமலையா ரிலம்பகம்.

'ஜீவகன்' மாமனுர் வீட்டில் வெகுகாலம் வசித்துவந்தும், அவனுக்கு அலுப்பு ஏற்படவில்லை. நட்பினரோடு வசிப்பதால் வருஷமும் நிமிஷமாகச் செல்லுமன்றோ? பின்பு ஒருசமயம் 'கனகமாலை' ஜீவகனருகேவந்து "காதல! தங்களைப்போன்ற ஒருவர் நமது ஆயுத சாலைக்குள் சென்று ஆயுதங்களை யெடுக்கின்றார்; தாங்கள் அங்கே வந்து பார்க்கவேண்டும்" என்று சொன்னாள். இதனைக்கேட்ட ஜீவகன் ஆச்சரியமடைந்தான். 'கந்தோத்கடன்' புதல்வனும் நமது சகோதரனுமாகிய "நந்தாட்யன்" தான் இங்கே வந்திருக்கவேண்டுமென்று நினைத்தான். பின்பு ஜீவகன் ஆயுதசாலைக்குச் சென்று அங்கே "நந்தாட்ய"னைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். கூடிப்பிரிந்த சகோதரனைக் கண்டால், எல்லையின்றி ஆனந்தம் உண்டாகுமன்றோ? 'நந்தாட்ய'னும் ஜீவகனைக் கண்டதும், தான் அநுபவித்த துன்பங்களையெல்லாம் மறந்து விட்டான். அவர்களிருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு மிகுந்த சந்தோஷமடைந்தனர்.

பின்பு ஜீவகன் தனியே தன் தம்பியைப்பார்த்து, "அப்பா! நீ இங்கே எவ்விதம் வந்தாய்?" என்று வினவ, "நந்தாட்யன்" துக்கத்தை யடக்கிக்கொண்டு "அண்ணா! நீ இராசமாபுரத்திலிருந்து எங்களுடைய பாபவசத்தினால் வெளியே சென்றதும், நமது பந்துக்களெல்லாம் துக்க சாகரத்தில் மூழ்கித்தவித்தனர்; அதைக் கண்ட நானும் இறப்பதற்குத் தீர்மானித்தேன்; அப்பொழுது "வித்தையின் மகிமையினால் உலக விருத்தாந்தங்களை யுணர்ந்த 'கந்தருவதத்தை' தற்காலம் எவ்விதம் இருக்கின்றாள்?" என்ற சிந்தை எனக்கு ஏற்பட்டது; உடனே நான் 'கந்தருவதத்தை'யின் வீட்டுக்குச் சென்று அவளைப்பார்த்து, "அம்மணி! நீர் கணவரைவிட்டுப் பிரிந்திருந்தும், ஆடையாபரணங்களாலும் புஷ்பங்களாலும் சிங்காரித்துக் கொண்டிருப்பது நியாயமன்று; நீர் என் இவ்விதம் செய்கிறீர்?" என்று கேட்டேன். அதற்கு அவள் என்னைப்பார்த்து "ஐய! நீர் என் வருந்துகின்றீர்? உமது தமையனார் சுகமாக வசித்துவருகின்றார். நான் மாத்திரம் விதிவசத்தால் அவரைப்பிரிந்து வருந்த நேரிட்டது; அவர் ஒவ்வொரு கிராமத்திலும் யாவராலும் பூஜிக்கப்

படுகின்றார்; பாக்கியம் பரிபக்வமாகி யிருந்தால், விபத்தும் சம்பத்தாக மாறுமன்றோ? நீர் அவரைப் பார்க்க விரும்புகிறீர்; ஆதலால், நீர் இப்படுக்கைமீது படுத்துக்கொள்ளும்; நான் உம்மை அவரிடம் சேர்ப்பிக்கிறேன். இக்கடிதத்தையும் அவரிடம் கொடும்!'' என்று சொல்லி, கடிதத்தையும் கொடுத்து, ஓர் படுக்கையில் படுக்கவைத்து மந்திர மகிமையினால் என்னை இங்கே அனுப்பிவைத்தாள்.'' என்று பதிலுரைத்தான். 'ஜீவகன்' தம்பி சொன்னதைக்கேட்டுச் சிறிது வருந்தினான். உயிருள்ளவரையில் ஆசை விடாதல்லவா? ஜீவகன் கடிதத்தைப் படித்துப்பார்த்து, தனது பிரிவால் குணமாலை வருந்துகிறாளென்றறிந்து, அவனும் வருத்தமடைந்தான். பின்பு அரண்மனையிலுள்ள இளவரசர்கள் 'நந்தாட்ய'னைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டு நல்வரவு கூறித் தக்கபடி உபசாரஞ்செய்தனர்.

அப்பொழுது இடையர்கள் தமது பசுக்களைக் கள்வர் களவாடிப் போய்விட்டதால் வருத்தமடைந்து, அரண்மனை வாயிலில் வந்து கோவென்று கதறினர். துன்பம் நேர்ந்தபோது பிராணிகள் ரக்ஷகரைத் தேடுவது சுபாவமேயன்றோ? அக்குரலைக் கேட்ட இறைவன் இச்செய்தியை விசாரித்தறிந்து மிகுந்த கோபங்கொண்டு பசுக்களை மீட்கும்பொருட்டு ஒரு பெரும்படையை ஏவினான். அரசர்கள் குடிகளை ஆபத்திலிருந்து காக்காவிடில், உலகமே அழிவுறுமன்றோ? உடனே 'ஜீவகன்' படையுடன் தானேசென்று பசுநிரையை மீட்டுவருவதாகக் கூறி மாமனிடம் விடைபெற்றுத் தேர்மீதேறிச் சென்றான்.

ஜீவகன் பசுக்களிருக்குமிடஞ் சென்று பார்க்கவே, பசுக்களைக் களவாடியவர்கள் தன்னுடைய நண்பர்களாகவே யிருந்தனர். பாக்கியமிருப்பின், விறகுவெட்டப் போனவனுக்கும் புதையல் கிடைக்குமன்றோ? உடனே ஜீவகன் தன் பிரம்பை வீசிப்படையைப் போர் புரியவொட்டாமல் தடுத்தான். பிறகு அவர்களனைவரும் ஜீவகனை வணங்கினர். ஜீவகனும் தனது நண்பர்களுக்கு நல்வரவு கூறி அவரை அரண்மனைக்கு அழைத்து வந்து அரசனுக்கு அறிமுகஞ்செய்து வைத்தான். அரசனும் மருமகனின் நண்பர்களைக் கண்டு மகிழ்ந்து உபசரித்தான். ஜீவகனும் தனது தோழர்களோடு சேர்ந்தால் மிகுந்த சந்தோஷமடைந்தான். ஜீவகனை அவன் தோழர்கள் முன்போலன்றி மிகுதியாக உபசரித்தமையால், அவன் சந்தேகங்கொண்டான். பிறகு அவன் அதற்குக் காரணம் யாதென்று தோழர்களைத் தனியே வினவினான். அப்பொழுது அவன் தோழர்களுள்

முதல்வனாகிய 'பத்மாநனன்' என்பவன் ஜீவகனைப் பார்த்துச் சொல்ல லானான்:

"நண்ப! முன்பு தங்களைப் பிரிந்ததால் நாங்கள் மிகவருந்திக் கொண்டிருந்தோம்; பின்பு ஒருவாறு தேறுதலடைந்து, தங்களைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகப்படையுடன் குதிரை மீதேறிக் கிளம்பி வெகு தூரஞ்சென்று, வழி நடந்தகளைப்பைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக 'தண்டகாரண்ணிய' த்திலுள்ள தபோனவத்திற் குச் சென்றோம். பின்பு ஆங்குள்ள விசேஷங்களைக்கண்டு கொண்டு போகும்போது, ஓரிடம் ஒரு தபசியான புண்ணியவதியைக் கண் டோம். அவள் எங்களைக் கண்டவுடன் 'நீங்கள் யார்? எங்கிருப் பவர்கள்?" என்று கேட்டாள். அதற்கு நாங்கள் "அம்மணி! நாங் கள் இராசமாபுரியில் வசித்த வணிக புத்திரனாகிய 'ஜீவக' னுடைய நண்பர்கள்; நன்றி மறந்த மாபாவியாகிய "காஷ்டாங்காரன்" என்ற அரசன் ஜீவகனிடம் பொறாமைகொண்டு ஒரு சமயம் அவனைக் கொல்ல முயற்சித்தான்" என்று சொன்னவுடன் அவள் மூர்ச்சித் துக் கீழே விழுந்தாள். உடனே நாங்கள் "அம்மா! ஜீவகனைக் கொல்லவில்லை; வருந்தவேண்டாம்" என்று தேற்றியபின், மூர்ச்சை தெளிந்தெழுந்து, தங்களுடைய விருத்தாந்தத்தையும் கண்ணீரை யும் வெளியாக்கினாள். அவள் மூலமாய்த் தங்களுடைய பிறப்பு வளர்ப்பைக் கேட்டறிந்த நாங்கள் தமது மகிமைகளை யெடுத்துக் கூறி, அவளைத்தேற்றி விடை பெற்றுக்கொண்டு இங்கே வந்து சேர்ந்தோம். இங்குவந்ததும், தங்களைக் காண்பதெப்படி யென்று எங்களுக்கு யோசனை உண்டாயிற்று. பிறகு "இத்தேசத்தரசனு டைய பசுக்கூட்டங்களை அபஹரித்தால், அப்பொழுது அரசனுக் குத் துணையாகப் பசுக்களை மீட்பதற்குத் தாங்களும் வரக்கூடும். அப்பொழுது தங்களைச் சுலபமாய்க் காணலாம்" என்று தீர்மானி த்துப் பசுக்கூட்டங்களை அபஹரித்தோம்; பின்பு தங்களையும் கண்டு கொண்டோம்" என்று சொன்னான். அறிவாளியாகிய 'ஜீவகன்' தாய் மூர்ச்சித்ததைக் கேட்டுப் பெரிதும் வருந்தினான். பிராணி களுக்குத் தாயாரிடமுள்ள அன்பானது எவராலும் கெடுக்கப் படு வதில்லை.

பின்பு ஜீவகன் தன் தாயை உடனே பார்ப்பதற்கு முயற்சித் தான். அன்னையைக்காண விரும்பாதவர் எவர்? அவன் தாயிடங் கொண்ட அன்பினால் மற்றக் காரியங்களை யெல்லாம் மறந்து விட் டான். பின்பு அவன் தனக்குத் தாயைப்பார்க்க விருப்பமதிகரிப்

பதைத் தன் மனைவியிடமும் மாமன் முதலியோரிடமும் தெரிவித்து, அவர்களை அங்கேயே இருக்கும்படி செய்துவிட்டுத் தோழர்களோடு குரைமீதேறி, 'தண்டகாரண்ணியம்' வந்து சேர்ந்தான். அங்கே அவன் தாயைக்கண்டு நமஸ்கரித்து அன்பால் உருகி நின்றான். தாயும்பிள்ளையைக் கட்டியணைத்து, புத்திரன் பிறந்தவுடனேயே பிரிந்ததால் உண்டான துக்கத்தைப் புத்திரனைக் கண்டதால் நீக்கிக் கொண்டாள்.

இவ்விதம் ஜீவகன் நண்பர்களுடன் அங்கே ஆறுநாட்கள் வசித்தான். பின்பு விஜயை புதல்வனைப் பார்த்து, "அப்பா! உனக்குத் தக்க படைத்துணையுமில்லை; பொருளுமில்லை; நீ எவ்வாறு பகைவனை வெல்லுவாய்?" என்று கேட்க, அவன், "அம்மா! நீவருந்த வேண்டாம்; நான் தந்தையின் பதவியை நிச்சயமாய் அடைவேன்" என்றான். அதனைக் கேட்டதாயும் இனி இராஜ்யம் கைக்கு வந்துவிட்டது என்றே எண்ணி மகிழ்ந்தாள். பின்பு அறிவாளியாகிய 'ஜீவகன்' இனித்தன் தாயைத் தனியே கானகத்தில் விட்டு வைப்பது கூடாதென்று தீர்மானித்து, 'விதய' தேசத்திலுள்ள தன் மாமனாகிய 'கோவிந்தன்' மாளிகையில் அவளைக் கொண்டுபோய் விடும்படி, சில நண்பர்களை அனுப்பினான். விஜயை அவர்களுடன் புறப்பட்டு அங்கே போய்ச் சேர்ந்தாள்.

பின்பு ஜீவகன் 'தண்டகாரண்ணிய' த்திலின்றும் நண்பர்களுடன் கிளம்பி, இராசமாபுரிக்கு அருகிலுள்ள பூங்காவனத்திற்கு வந்து, தன் தோழர்களை அங்கேயே இருக்கும்படி சொல்லிவிட்டு, இவன் மட்டும் தனியாய் அந்நகரைச் சுற்றிப்பார்க்கச் சென்றான். அப்பொழுது ஒரு தெருவில் ஒரு பெண் மாளிகை மீதிருந்து பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் ஐந்து பந்துகளை மாறி மாறி எறிந்து பிடித்து விளையாடினாள். அவைகளில் ஒன்று கை தவறிக் கீழே நின்ற ஜீவகனிடம் போய் விழுந்தது. உடனே அவன் மேலே நின்ற பெண்ணைப் பார்த்தான். பார்த்ததும் அவளிடம் காதல் கொண்டான். பிறகு அவளிடங்கொண்ட ஆசையினால், அம் மாளிகையின் முன் புறத்திலேயே அமர்ந்திருந்தான். சிறிது நேரத்திற் கெல்லாம் அவ்வீட்டுக்காரனாகிய 'சாகரதத்தன்' தன்னிடமிருந்த சாக்குகளை யெல்லாம் ஆறுகோடிப் பொன்னுக்கு விற்றுவிட்டு, ஜீவகனிடம் வந்து, "அன்ப! இது என் வீடு; எனக்கு 'ஸாகரதத்தன்' என்று பெயர்; என் மனைவிக்கு 'கமலை' யென்று பெயர்; எங்களுக்கு 'விமலை' என்றொரு புதல்வி யிருக்கின்றாள். அவள் மிக்க

ரூபவதியாவள்; அவள் பிறந்தவுடன் ஜோதிஷர்கள் "வெகு காலமாய் விற்காமல் குவிந்திருக்கும் இரத்தினங்கள் எவன் உமது வீட்டில் வந்து உட்கார்ந்தவுடன் விற்கின்றனவோ, அவனே இப்பெண்ணுக்குக் கணவனுவான்" என்று தெரிவித்தார்கள். நீர் எனது வீட்டில் அமர்ந்தவுடன் வெகு காலமாய் விற்காமல் குவிந்திருந்த இரத்தினங்களெல்லாம் விற்றுகிவிட்டன. ஆதலால், பாக்கியவானுகிய நீர் தடை சொல்லாமல் எனது புதல்வியை மணந்து கொள்ளல் வேண்டும்' என்று தெரிவித்தான். அதைக்கேட்ட ஜீவகனும் அவளை மணப்பதற்கு இசைந்தான். பின்பு ஓர் சுபமுகூர்த்தத்தில் 'ஸாகரதத்தன்' தன் புதல்வியாகிய 'விமலை'யை நீர்த்தாரை வார்த்துக் கொடுக்கவே, 'ஜீவகன்' அவளை அக்னிஸாக்ஷியாக ஏற்றுக் கொண்டான். பிறகு அவன் தன் காதலியோடு சிலகாலம் அங்கேயே வசித்துக் கொண்டிருந்தான். பின்பு அவன் தனக்கு வெளியே செல்லவேண்டிய காரியமிருப்பதைத் தன் மனைவி முதலியோரிடம் தெரிவித்து, உடனே கிளம்பித் தன் தோழர்களிருக்குமிடத்திற்கு வந்து சேர்ந்தான்.

எட்டாவது விமலையாரிலம்பகம் முடிந்தது.

* * *

அப்பால் ஜீவகன் பிரிவைப்பொறுமல் வருந்தியிருந்த அவன் தோழர்கள் அவன் மணக்கோலத்தோடு திரும்பி வந்திருப்பதைக் கண்டு, மிகவும் சந்தோஷ மடைந்தனர். ஜீவகனும் தான் 'விமலை'யை மணந்த விஷயத்தை நடந்தவாறே அவர்களிடம் கூறினுன். அப்பொழுது விதூஷகனுகிய 'புத்திஸேனன்' என்ற நண்பன் ஜீவகனைப் பார்த்து, "நண்பனே! பிறரால் உபேக்ஷிக்கப்பட்ட கன்னிகைகளை நீ மணந்து மகிழ்கின்றுய்; இந்நகரத்திலேயே ஆடவர் முகத்தையே காண்பதில்லை யென்று விரதம்செய்து கொண்டிருக்கும் 'ஸுரமஞ்சரி'யை நீ மணந்து வந்தால் அப்பொழுது நீ சிறந்தவனுவாய்!" என்று வேடிக்கையாகக் கூறினுன். இதைக்கேட்ட ஜீவகன் புன்னகை புரிந்து, "நண்ப! நீ கூறியபடியே நான் 'ஸுரமஞ்சரியை' மணந்து வருகிறேன்; நீ இவ்வூரிலுள்ள 'காமகோட்டம்' என்னும் கோயிலிலுள்ள விக்கிரகத்தின் பின்புறம் நாளையதினம் போய் மறைந்திரு; அவள் அங்கேவந்து என்னை மணக்கும் பொருட்டுக் கடவுளை வரம்வேண்டவும் செய்கிறேன்; என் சக்தியைப் பார்" என்று கூறி விடைபெற்றுச் சென்றுன்.

பின்பு அறிவாளியாகிய 'ஜீவகன்' கிழவன் ரூபத்துடன் சென்றால்தான் 'ஸுரமஞ்சரி'யைக் காணமுடியுமென்று தீர்மானித்து முன்பு தனக்கு 'யக்ஷன்' உபதேசித்த மந்திர மகிமையினால், கிழத்தனமுள்ள சரீரத்தை வரவழைத்துக் கொண்டு, அந்நகரமெங்கும் திரிந்துவந்தான்.

கிழத்தனமுள்ள உருவத்தைக் கண்டதும் அறிவாளிகள் ஒழிவை அடைந்தனர். முதுமைப் பருவம் எவருக்கும் ஒழிவை உண்டாக்குமன்றோ? கிழத்தனமான அ ஈயின் இறகினும் இலகுவான தோலில் அழகென்பது 'பிரமம்' தானென்று தெரிவித்தது. இந்த ஆயுளும் உடலும் க்ஷணந்தோறும் அழிவடைகின்றன. இங்ஙனம் அழிவடைவதை மனிதர் உணர்வதில்லை. காலமே அழிவு ரூபமாயிருக்கின்றது. அந்தோ! முதுமைப் பருவத்தில் ஜனங்கள் தாயையும் திருணமாக நினைக்கின்றனர். ஆதலின் கிழத்தினும் மரணம் மேலாகும்.

இவ்வாறு ஜீவகன் கிழ உருவத்துடன் உலாவிக்கொண்டு, 'ஸுரமஞ்சரி'யின் மாளிகைக்குச் சென்றான். அங்கே காவற்காக்கும் பெண்கள் ஜீவகனைப் பார்த்து, "ஐய! நீர்யார்? இங்குவந்த காரணம் யாது?" என்று வினவ, அவன் "அம்மணி! எனக்குப் பசி மிகுதியாயிருப்பதால் ஏதேனும் உணவு கொடுங்கள்" என்றான்.

அதைக்கேட்ட அவர்கள் "ஐயோ! இவருக்குப் பசி அதிகமாயிருக்கிறதுபோலும்! ஆதலால், இவர் உள்ளேசென்று புசிக்கட்டும்" என்றெண்ணி "ஐயா! உள்ளேபோய் உணவருந்துங்கள்?" என்று கூறி உள்ளே செல்ல வழிவிட்டனர். கிழவனும் கழியை ஊன்றிக்கொண்டு உள்ளே சென்றான். கிழவன் அந்தப்புரம் போனதும், 'ஸுரமஞ்சரி'யின் தோழிகள் கிழவன் வந்திருக்கும் விஷயத்தைப் பயத்துடன் யஜமானிக்குத் தெரிவித்தனர். ஆடவர் முக தரிசனத்தையே வெறுத்துவந்த 'ஸுரமஞ்சரி'யும் அக்கிழவனுக்கு ஆசனமளித்து அமரச் செய்தாள். பின்பு கிழவன் தனக்குப் பசியாயிருப்பதாக அறிவித்தான். உடனே 'ஸுரமஞ்சரி' அவனுக்குப் போஜனம் பண்ணிவைத்தாள். பின்பு கிழவன் களைத்தவன்போல, ஆங்கிருந்த கட்டில்மீது படுத்தான். பிறகு அவன் யாவர்மனதையும் வசப்படுத்தக்கூடிய ஒரு பாட்டை இனியகுரலில் பாடினான். அதைக்கேட்ட 'ஸுரமஞ்சரி' இவன் மிகுந்த சக்தியுள்ளவன் என்று எண்ணினாள். அவள் தன்விருப்பத்தையும் இவனிடம் பரீக்ஷிக்க

வெண்ணி "ஐய! தங்களுக்குக் கானத்தில் இருப்பதுபோல, மற்ற விஷயங்களிலும் சக்தியுண்டா" என்று கேட்க, அவன் "எனக்கு எல்லா விஷயத்திலும் சக்தியுண்டு" என்றுரைத்தான்.

பின்பு அவள் அக்கிழவனை அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்று, படுக்கைமீது உட்காரச்செய்து, "ஐய! எனக்கு 'ஜீவகனை'யே மணக்கவேண்டுமென்று விருப்ப மிருக்கின்றது; அவ்விருப்பம் நிறைவேறுமா?" என்று கேட்க, அவன் "தங்காய்! உன்விருப்பம் விரைவில் நிறைவேறும்; நீ இவ்வூரிலுள்ள "காமகோட்டம்" சென்று கடவுளை வேண்டிக்கொள்" என்று கூறினன். பின்பு அவன் அங்கேயே நித்திரை புரிந்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் 'ஸுரமஞ்சரி' காமகோட்டத்திற்குப் போய், "சுவாமி! எனக்கு ஜீவகனையே மணவாளனுகத் தரல்வேண்டும்; அங்ஙனம் தந்தால், உம்மை எப்பொழுதும் தொழுவேன்" என்று கடவுளை வணங்கினுள். அப்பொழுது அக்கடவுளின் பின்பக்கத்தில் மறைந்திருந்த "புத்திஸேனன்" "பெண்ணே! நீ விரும்பியவாறே ஜீவகனைக் கணவனுகப் பெறுவாய்; நீ வருந்தாமல் உன் னிருப்பிடஞ்செல்" என்றான். அவள் தனக்குத் தெய்வம் கூறியதென்றே நினைத்து மகிழ்ச்சியுடன் தன் வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தாள். ஜீவகனும் தன் தோழர்களிடம் போய்ச் சேர்ந்தான். அவன் நண்பர்கள் நடந்த விஷயங்களைக் கேள்வியுற்று மகிழ்ந்தனர்.

பின்பு ஜீவகன் தோழர்கள், 'ஸுரமஞ்சரி' தந்தையாகிய 'குபேரதத்த'னிடம்போய் "தங்கள் புதல்வியை ஜீவகனுக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டும்" என்று கேட்டனர். அவன் அதைக் கேட்டு மகிழ்ந்து தன் புதல்வியின் சம்மதத்தையும் அறிந்துகொண்டு 'ஸுரமஞ்சரி'யை ஜீவகனுக்குக் கொடுப்பதாகத் தெரிவித்தான்.

பின்பு 'குபேரதத்தன்' ஓர் சுப முகூர்த்தத்தில் ஜீவகனை நண்பர்களுடன் தன் மாளிகைக்கு வரவழைத்தான். உடனே அவன் 'ஸுமதி'யின் பெண்ணுன 'ஸுரமஞ்சரி'யை 'சீவக'னுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். ஜீவகனும் அவளை விதிப்படி ஏற்றுக்கொண்டான்.

அப்பால் ஜீவகன் அங்கிருந்து நண்பர்களுடன் புறப்பட்டுத் தன் பெற்றோரின் மாளிகைக்குச் சென்று, 'கந்தோத்கட'னையும் 'சுநந்தை'யையும் வணங்கினுன். அவன் பிரிவால் வருந்தியிருந்த அவர்

கள் அவனைக் கண்டதும் மிகுந்த சந்தோஷமடைந்தனர். பிறகு ஜீவகன் 'கந்தருவதத்தை'யையும் 'குணமாலை'யையும் கண்டு அவர்களைச் சந்தோஷப் படுத்தினான். அதன்பிறகு அவன் தன் பகைவனை ஒழிப்பதற்கு இனித்தான் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்து 'விதேஹ' தேசத்தரசனாகிய தன் மாமனைக் காணக் குதிரை மீதேறிப் புறப்பட்டான். அப்பொழுது அவன் தோழர்களும் அவனைச் சூழ்ந்து சென்றனர்.

(ஒன்பதாவது ஸூரமஞ்சரியாரிலம்பகம் முடிந்தது.)

* * *

**By M. M. Narayanaswamy Aiyar,**
*Mudikondan, P. O.*
*(Tanjore Dist)*

---

## பதிவிரதா தர்மம்.

---

பகவான் அனுக்கிரகத்தால் ஜனிக்கக்கூடிய பதிவிரதா சிரோமணிகள் அனுசரிக்கவேண்டிய தர்மங்கள் அநேகம் இருக்கின்றன. இக்காலத்தில் சில அஸத்ஸ்திரீகள் பிற புருஷர்மேல் அத்யந்த எண்ணமுடையவர்களா யிருப்பினும் அவர்களுக்குச் சாவித்திரி, பாஞ்சாலி, தமயந்தி என நாமங்களேற்பட்டிருக்கின்றன. இத்திரு நாமங்களால் அவர்களை பதிவிரதைகளென்று எண்ணலாகாது. அவர்களின் செய்கைகளினால் தான் பதிவிரதைகளென்பதைக்காண வேண்டும். பஞ்சபாண்டவர்கள், வனத்தில் அஞ்ஞாதவாசம் செய்தருளிய பொழுது திரௌபதி யனுசரித்த பதிவிரதா தர்மங்களைக் கண்டுகளித்த ஸமஸ்தாரக்ஷகனான எம்பெருமான் கண்ணபிரானின் தேவியார் திரௌபதியைச் சோதிக்கத் திருவுளம்கொண்டு, "சகல புஜபலபராக்ரமத்தோடு விளங்கிநின்ற பஞ்சபாண்டவர்களை எப்படி ஸம்ரக்ஷித்தீர்?" என்று அவளிடம் கேட்டாள்.

இதற்குப் பதிலாகத் திரௌபதியம்மை பதிவிரதா தர்மங்களை உபதேசிக்கச் சித்தம்கொண்டு அடியில் வருமாறு கூறினாள். அதனைப் படிப்பதால் பதிவிரதைகளின் இலக்ஷணங்களைத் தெரிந்து கொள்ளலாம். அவள் கூறியதாவது:—

மூலிகையல்லாமலும், ஹோமசகாய மல்லாமலும், மந்திரோபாய மல்லாமலும் பர்த்தாக்களைப் பிரியத்துடன் தங்களிடத்தில்

ஒழுக பதிவிரதைகள் செய்யலாம். மருந்து மாயமின்றிக் கணவனுயிரைத் தன்னுயிராக பாவித்து பதிவிரதை என்னும் நாமத்தைப் பெறலாம். பதிவிரதை யெனப்பெயரெடுப்பது அகங்காரம், காமக்ரோதாதிகளிலடிபடாமல் இருந்தால்தான் முடியும். மதமல்லாமலும் ஈரிஷையின்றியும் நடந்தால் நல்ல நாமத்தைப் பெறலாம்.

பதிவிரதை யெனப்பெயரெடுக்க விரும்புவோர், கெட்ட வசனத்துக்கு அஞ்சுதல் வேண்டும்; கபடமான பார்வையின்றி யிருத்தல் வேண்டும். கணவனே, கதிரொளிபோல் ஜ்வலிக்கும் பதிவிரதைகளுக்குகதி. பிற புருஷர்கள் தேவர்களைப்போல் தேஜஸுடைய வர்களாயிருந்த போதிலும் அவர்களைப் பதிவிரதைகள் கண்கொண்டு காணுதலாகாது. பர்த்தா எவ்விதத்தில் எப்போகத்திலிச்சிக்கின்றானோ அப்போகத்திலே பதிவிரதைகளமருதல்வேண்டும். கணவன் வெளியிலேகி வீடு வருங்காலத்தில் ப்ரத்யுத்தாநம் முதலிய உபசாரங்களைச் செய்வித் தருளல்வேண்டும். ஸத்தியஸந்தியா யிருத்தல் அவசியம். அநாவசியமாய் ஆனந்தத்தி லமர்ந்திருப்பது அடாது. "அடாது செய்வோர் படாதுபடுவர்" பாபகர்மங்களைச் செய்யத் துணியலாகாது. பர்த்தாவுக்கு ஹிதாஹித காரியங்களைச் செய்து மனதை ஆற்றுதல் வேண்டும். பெரியோர் உபதேசித்திருப்பதை மீறி நடத்தல் தகாது. பர்த்தாவின் வரையறையைக் கடக்கக் கனவிலும் கருதலாகாது. பர்த்தாவின் விருதத்தையே அனுஷ்டித்தல் வேண்டும். பர்த்தாவேகதி, அவனே பரதேவதை, அவனே தேவனென்றிருத்தல் வேண்டும். அதிதி வந்திருக்குமளவில் அறுசுவையுணவை, அவரோடு கூடி உண்ணாமல் தனியே அருந்துதல் அடாது. பர்த்தாவுக்கு அறுசுவைகளடங்கிய அன்னத்தை அதிதிகளோடு அளித்தல் தகும். அவர்கள் கிரஹிக்கும் பதார்த்தங்களை ஆலஸ்யமில்லாமல் காத்தருளல் வேண்டும். அதிதிகள் வந்திருந்தால் அவர்களுக்கு ஷோடச உபசாரங்களைச் செய்து அலக்ஷியம் செய்யாமல் அன்னம் அளித்து அவர்களை அனுப்புதல் வேண்டும். உயர்ந்த அந்தஸ்திலிருந்து ஆயிரம் சிற்றாள்களை வைத்துக்கொண்டு இல்லறத்தை நடத்திவரும் வீட்டில், காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கும் சேடியர்களனேகர் இருந்தபோதிலும், பதிவ்ருதை தன் நாயகனிட்ட வேலையைத் தானே செய்தருளல் வேண்டும். அப்படிக் கல்லாமல்போனால் தங்கள் மனைவிகளிடத்தில் பர்த்தாக்களுக்கு அதிருப்தி ஏற்பட இடமுண்டாகும். வேலைக்காரர்களிருக்கின்றார்களென்று [illegible]

யிருத்தல்கூடாது. ஸர்வேச்வரனுனபகவானுடைய பாதார விந்தங்களைக்கூட அடையும் படிக்கான கருவியாயிருக்கின்ற அன்பினுல் பதிவிரதைகள் பர்த்தாக்களைப் பிரீதி செய்விக்கலாம். கற்புடையாள் தன் நாயகனது முகம்கோணுமல் முகமறிந்து சிஸ்ருஷை செய்தல வஸ்யம். தன்னுயகன் தேடிய பிக்ஷாப்ரார்த்தமான போஜனத்தை ஸந்துஷ்டர்களாக புஜித்து ஜீவித்தும், ஸம ஸந்துஷ்டர்களாய் இருந்து, அதனுல் உண்டாகும் வைராக்கியத்தின் பொருட்டடையும் கர்வத்தை யொழித்து ஒழுகி நிற்பது பதிவிரதையின் தர்மம். அப்பதிவிரதையான சிரோமணிக்குத்தான், ஸர்வ ஸங்கங்களையும் விட்டு ஒருநாளும் யாருக்கும் பாதந்தானின்றி ஸர்வதா ஸஞ்சார ஸீலனுய் வைராக்கியத்தின் சுகத்தை அநுபவிப்பவனுயிருக்கும், பரமானந்தத்திற்குக் காரணமான பரமாத்மா, அப்பதிவிரதையின் மஹாத்மியத்தைக் கண்டு களித்துத் தன்பாதாரவிந்தங்களை அடையும்படிக்கு அநுக்ரகிப்பார். ஆகையினுல் பெண்டிர்களாகப் பிறந்த எல்லோரும் பதிவிரதை என்னும் நாமத்தைப் பெறுவதற்கு முயற்சிப்பாராக. பதிவிரதா சிரோமணிகளுக்கே, மோக்ஷமும் கிட்டும். இவ்வுலகில் அவர்கள் துன்பம் இல்லாதிருத்தலையும் அடைவார்கள்.

நடாதூர்-வரதாசாரி.

விழுப்புரம்.

---

## மாணவர் பக்கம்.

---

### கல்வியின் பெருமை.

அருந்தமிழ்த்தாயின் அருமைப் புதல்வீர்!

ஆழிசூழுலகின்கண் அமிழ்தினுமரிதாகிய மானிடஜென்ம மெடுத்தவர்களாகிய நம்மனோர்க்குவேண்டுவனவாகிய இருவகைப்பொருள்களுண்டு. அவையாவன:—கல்வி, செல்வம் என்பனவாம். 1-வது கல்விப்பொருள், நன்மை, தீமைகளை உணர்த்தி, இம்மை, மறுமைப் பயன்களை அளிக்கவல்லது. 2-வது, செல்வப்பொருள் நல்வழியிற் செலுத்தினுல் நன்மையைத் தரத்தக்கதெனினும், பெரும்பான்மையும் மனிதரை இம்மையிற் பழிபாதகங்களைத் தேடச்செய்தும், மறுமையி லடையவேண்டிய சுவர்க்காதி போகபாக்கியங்களைத் தவிர்த்தும் அவர்க்குத் துன்பத்தைத் தரவல்லது. மாணவர்களே! இவற்றைக் கவனியுங்கள்! இவ்விருவகைப் பொருள்களில் மிக உன்

னதப் பதவியைப் பெற்றிருப்பது கல்விப்பொருளே; இதைக் குறித்தே;

"கைப்பொருள் தன்னின்
மெய்ப்பொருள் கல்வி"

என்றும்,

"அறிவுடையா ரெல்லாமுடையார் அறிவிலார்,
என்னுடைய ரேனு மிலர்"

என்றும்,

"ஒருமையில் தாம்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்றும்,

"குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு"

என்றும்,

"இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து"

என்றும்,

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

என்றும்,

ஆன்றோர்கள் "கல்வியின் பெருமை"யை மேன்மைப் படுத்தாநின்றார்கள். ஆகவே, செல்வப்பொருளினும், மிகப்பெருமை பெற்றுயர்ந்து சிறந்தது "கல்விப்பொருளே" என்பது உபசாரமன்று. இங்ஙனம், செல்வப்பொருள் இன்றிருந்து நாளையழிந்து நாஸ்தியாய்ப் போகக்கூடியது. கல்விப் பொருளோவெனின், என்றும் மறையாது, குறையாது நிலையுற்றிருப்பதற் குரியது. ஆதலின்,

பூவுலகனைத்தும் "படைத்தளித்தழிக்கும்" பரம்பொருளின் பெருங்கருணையாலுதித்த மானிடர்கள் "கல்வி"ப் பொருளைத் தமக்

குத் துணைப்பொருளென்றெண்ணி அக்கல்வியை வருந்தித் தேடிக் கொள்ளவேண்டும்.

மாணவர்களே! இப்பெருஞ்சிறப்புற்ற "கல்வி"யைக் கற்குங் காலம் "இளமைப் பருவமேயாகும்" இங்ஙனம், கற்காமல் கல்வியை இன்று கற்போம், நாளைக்கற்போம், எனவீணாக "இளமைப் பருவத்தை" வியர்த்தமாக்குதல் தகுதியன்றாம். மேலும், இவ்விளமைப்பருவம் என்றென்றைக்கு மிருக்கத்தக்க தல்ல;

"நரைவருமென் றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந்திருப் பார்"

மேலும், இவ்வாக்கையானதும், அழிவின்றி நிலையுற்றிருப்பதல்ல வென்பதை,

"கோளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து"

என்றும்,

சமணமுனிவர்களும் கூறியிருக்கின்றனர். ஆதலின், செந்தமிழ்த்தாயின் செல்வப்புதல்வீர்!

"இளமையிற்கல்" என்று நம்முலக ஞானமாதாவாகிய "ஔவைப் பிராட்டியார்" திருவாய் மலர்ந்தருளிய வேதவாக்கியத்தை ஒவ்வொருவரும் "கடைப்பிடித்து" இளம்பருவத்திலேயே "கல்வி"யினிடத்து * மலினங் கொள்ளாமல் போதகாசிரியரையடுத்து "கல்வி"யைக்கற்று இதைவிட மேலான பதவியைப் பெறல்வேண்டும்.

இங்ஙனம், கல்வியைக் கற்கச்சோம்பலுற்றவன் தரித்திரத்தையடைவானென்பதற் கய்யமுண்டோ? இல்லை. இஃது விளங்கவே, "சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்" என்று நம் ஞானமாதாவும் நவின்றுளர். மாணவர்களே! கல்வியைக் கற்பதிலும் மனிதர்கட்கு நல்லறிவைப் புகட்டி நித்யானந்தப் பதவியைத் தரக்கூடிய நல்ல நூற்களையே கசடறக் கற்கவேண்டும்.

---

* மலினமாவது=சோம்பல், மறதி, மோகம் என்பவைகளாம்.

மேலும், மனிதர்கட்குக் கணிதநூலும், இலக்கணநூலும் கண்களென்று சொல்லத்தக்கவைகளாம். இதனை, "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என "ஔவைமூதாட்டியாரிபம்பிய தாலறிக" இஃதன்றி, கற்றவர்களைக் கண்ணுடைய வர்களென்றும், கல்லாதவர்களைக் குருடர்களென்றும் தெய்வப்புலமை வாய்ந்த நாயனாரும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றனர். அதை,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்." (என்பதாலுணர்க)

இது நிற்க; முப்பத்திரண்டு லக்ஷணங்களைப் பொருந்தியுள மனிதனாயினும், கல்வியில்லாவிடில் அவன் மிருகங்கட்கே உவமையாவன்.

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்,
கற்றாரோ டேனை யவர்......

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,
தமிழ் நாவலர்.
(இன்னும் வரும்.)

---

## கொலாசஸ் என்னும் வெண்கலவுருவம்.

---

பண்டைக்காலத்தில் சிலதேசத்தார் அளவுக்கு மிஞ்சிய பருமனுள்ள உருவங்களைக் "கொலாசஸ்" என்று சொல்வது வழக்கம்; அப்படியிருந்தாலும் முக்கியமாய் ரோட்ஸ் என்னும் தீவின் துறைமுகத்தில் இருந்த அப்பாலோ என்பவனுடைய வெங்கல உருவத்தைத்தான் கொலாசஸ் என்று பலரும் சொல்வார்கள். இவ்வுருவம் மிதமிஞ்சிய பருமனுள்ளதா யிருந்ததனுல் முற்காலத்தவரும் பிற்காலத்தவரும் இதை உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக மதித்திருக்கிறார்கள்.

ஷை ரோட்ஸ் என்னும் தீவு கிரீஸ் தேசத்தைச்சேர்ந்த ஒரு முக்கியமான ராஜ்யம். கிரீஸ்தேசத்தாரின் பழக்க வழக்கங்களும், கல்வி யொழுக்கமும் மிக மேம்பட்டவைகளாதலின் அவை எங்கும் பரவியிருக்கின்றன; அத்தேசத்தார் கொள்கைகளை அனுசரிக்காத தேசத்தார் ஒருவருமில்லை. இக்காலத்திலும் மேல்நாட்டில் கிரேக்கருடைய சீர்திருத்தம் காணப்படுகிறது. இத்தகைய இவர்களால்செய்து ஷை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த கொலாசஸ் என்னும் ஆச்சரியமான உருவத்தைப்பற்றி எல்லோரும் அறிந்திருக்கவேண்டிய தவசியமாதலால், அதன் விவரத்தைச் சிறிது துலக்குவாம்.

மேற்கூறிய ரோட்ஸ் துறைமுகத்தில் நடுவில் குழிந்தும், ஓரங்களெல்லாம் கற்பாறைகளால் அமைந்தும் மூன்றாம் பிறைபோல் விளங்கும் ஒரு

ஹார்பர் உண்டு. அதன் இரண்டு தலைப்புக்களும் அதிக சமீபத்தில் நெருங்கியிருக்கும். அவற்றில் ஒவ்வொன்றிலும் சிற்ப வேலையாலமைந்த அதிக பலமான கற்கட்டிடங்கள் முற்காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன. அவ்விரண்டு தலைப்புக்கும் நடுவே ஒருகப்பல்தான் செல்லக்கூடும். இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்திருக்கும் இவ்வளவு பலமான கப்பல் நிற்குமிடத்தைப் பெற்றிருந்த அத்தீவிலுள்ள கிரேக்கர்கள், தங்களுக்குள்ள வீண்கர்வத்தால் அந்தத் துறைமுகத்தின் பெருமையை எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி செய்யவேண்டுமென்று ஒரு பலமான யோசனைசெய்தார்கள். அவ்வாறு யோசித்தவர்கள், தங்கள் பெருமையைக் காட்டுவதைப்பார்க்கிலும் குறியாக நின்று தூரத்தில்வரும் கப்பல்களை அழைப்பதற்கு உதவியாயிருக்கும் பொருட்டு ஓர் உருவத்தைச்செய்து இத்துறைமுகத்தில் நிறுத்துவதே நலமெனக் கருதி, அப்படிச் செய்வதிலும் கிரேக்கருடைய தெய்வங்களுள் அப்பாலோ என்ற ஷ தெய்வத்தினுடைய மிகப்பெரிய உருவத்தையே நிருமிக்கத் தீர்மானம் செய்தார்கள். அப்படித் தீர்மானித்த பின்னர் விண்டஸ் என்னும் நகரத்திற்பிறந்தவனும் லிஸிப்பஸ் என்னும் சிற்பியின் சிஷ்யனுமான சார்லஸ் என்பவனை இவ்வேலையைச் செய்து முடிப்பதற்குத் தகுதியானவனென்று தேர்ந்தெடுத்தார்கள். ஷ லிஸிப்பஸ் என்பவனே மிக்க கீர்த்திவாய்ந்த ஒரு சிற்பி. ஆயினும், அவனுடைய மாணாக்கனாகிய சார்லஸ் அவனைக்காட்டிலும் சிறந்தவன். அவன் அவ்வாறு சிறந்தவனென்பதற்கு, அவனால் செய்யப்பட்ட இந்தக் கொலாசஸ் உருவம் ஒன்றே போதுமான சாக்ஷியாயிருந்தது. அவன், மேற்கூறியபடி கிரேக்கர்கள் கேட்டுக் கொண்டதன்மேல் அரிய பிரயாசத்துடன் இவ்வுருவத்தைச் செய்து முடித்தான். அவ்வாறு இவ்வுருவத்தை இயற்றி நிறுத்தினவுடன் இதன் பருமனைக்கண்டு எல்லோரும் வியப்படைந்தார்கள். இதன் வேலைப்பாடும் மிக்க அருமையாயிருந்தது. ஆனால், இந்த உருவம் 'இவ்வாறுதான் வார்க்கப்பட்டது' என்று நாம் அறிந்துகொள்ள வழியில்லை. இவ்வேலை முடிவதற்குதவியாக அக்காலத்திய மனிதர்களுக்கிருந்த உபகரணங்கள் இன்ன இன்ன வென்பதும் நமக்குப் புலப்படவில்லை. 'இந்த உருவத்தைச் செப்பம்செய்து நிலைநிறுத்துவதற்குப் பன்னிரண்டு வருஷகாலம் ஆயின' என்பது மட்டும் நமக்குத்தெரிகிறது, இது மிக்க விலையுயர்ந்த வெண்கலத்தால் செய்யப்பட்டது. ஆயினும், என்ன என்ன உலோகங்களை எந்த எந்த அளவாகச் சேர்த்து அவ்வெங்கலத்தை உண்டுபண்ணினார்களோ தெரியவில்லை. ஹார்பரைச் சுற்றிநிற்கும் இயற்கை மதில் வாயிலின் மேற்பாகத்தில் பக்கத்துக்கு ஒருகாலாக இரண்டுபக்கத்திலும் இரண்டுகாலையும் அகற்றி ஊன்றிக்கொண்டு நிற்கும்படி இவ்வுருவம் அமைக்கப்பட்டிருந்தது. இதை நோக்கும்போது ஷ சிற்பி, எப்படி இந்த உருவத்தை நிற்கச் செய்தானோ என்று ஆச்சரியமுண்டாகும். இதன் உயரம் 70. முழம். அஃதாவது, சற்றேறக்குறைய 105. அடியாகும். இதன் இரண்டு கால்களுக்கும் இடையில் ஒருகப்பல்பாய்மரங்களை இறக்காமல் எல்லாப்பாய்களையும் விரித்துக்கொண்டு எவ்வகை இடையூறுமில்லாமல் உள்ளும் புறமும் போக்குவரவு செய்யலாம். இத்தகைய

உருவத்தை மேற்கண்டபடி செய்தகாலம் இன்னதென்று விளங்கவில்லை; ஆயினும், ஆராய்ச்சிக்காரர் கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 300. வருஷங்களுக்கு முன் இந்த உருவம் அங்கேசெய்து நிறுத்தப்பட் டிருக்கக்கூடுமென்று யூகிக்கின்றனர்; இவ்வாறு இது பலமாகவும் பெரிதாகவும் செய்யப்பட்டிருந்த போதிலும் 56. வருஷங்கள் வரையில்தான் செம்மையாக அங்கே நின்றுகொண்டிருந்ததாம். 88. வருஷங்கள் வரையில் நின்றதாகவும் சிலர் சொல்லுகிறார்கள். இது நின்றுகொண்டிருந்தகாலம் வரையில் இதன் பயங்கரமான தோற்றமும், கௌரவமும் சிறிதும் குலையாமல் இருந்தன. அக்காலத்தில் இந்தப் பெரிய உருவத்தினின்றும் தோன்றும் நிழல் சமுத்திரத்தில் அதிக தூரம் வரையில் நீண்டிருக்குமாம். சமுத்திரத்தில் போக்குவரவு செய்யும் கப்பல் பிரயாணிகள் அவ்வுருவத்தைத் தெய்வமென்றே கருதுவார்களாம். அதன் கெம்பீரமான தோற்றம் ஆகாயத்தை அளாவிக்கொண்டிருந்ததாம்; அங்கேபெய்யும் மழைகளாலும் விழும் இடிகளாலும் இவ்வுருவத்திற்கு இது நின்றகாலம்வரை ஒருதீங்கும் விளையவில்லையாம். கீழிருந்து இதன் தலைவரையிலும் செல்லத்தக்க சுற்றுப்படிக்கட்டொன்று இருந்ததாம்; அங்கிருந்தவர்கள் அப்படிகளின் வழியாக உச்சியில் ஏறி நின்று இவ்வுருவத்தின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த நச்சுக்குழல்களின் வழியாகத் தூரத்தில்வரும் கப்பல்களைப் பார்ப்பார்களாம்.

மேற்கண்டவாறு இது, சுமார் 88 வருஷகாலம் நின்றபின், கி. மு. 224ல் அங்குண்டான ஒரு பூகம்பத்தால் இவ்வுருவிற் சிறிது பின்னமுண்டாயிற்றும். அதற்குப் பின்னர் அவ்வாறு பின்னப்பட்ட உருவோடு இது 894-ஆண்டு நின்றுகொண்டிருந்தது. அவ்வளவு காலம் வரையில் ஒருவரும் இதைப்பழுது பார்க்க எத்தனிக்கவில்லை. அதன்மேல் சிலகாலம் சென்றபின்னர், இந்த அப்பாலோவின் உருவத்தைத் தங்கள் தேசத்துக்கு மிக்க கௌரவமாகக் கருதியிருந்த ஷே கிரேக்ஜாதியார், இதிற்பழுது பட்டிருந்த பாகங்களைச் சரிப்படுத்தி முன்போல் இதை முழு உருவத்தோடு நிற்கும்படி செய்யும்பொருட்டு வரி ஏற்படுத்தி வசூல் செய்தார்கள். ரோட்ஸ் தீவிலுள்ளாரும் அதைக்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள். அப்படி வசூலிக்கும்போது பணம் அதிகமாக வருலாயிற்று. அவ்வாறு அதிகத்தொகை வசூலாகியும் இதற்காகப் பணவசூல் செய்ய முன்னின்றவர்கள் ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு சாக்குப்போக்குகள் சொல்லிக்கொண்டு கோரியகாரியத்தை நிறைவேற்றாமலிருந்து கடைசியில் சேர்ந்திருந்த திரவியத்தைச் சொந்த உபயோகம் செய்து கொண்டார்கள். பிறகு கிரீஸ்தேசத்து உத்தியோகஸ்தர்கள் இதற்குக் காரணம் யாதென்று விசாரித்தபோது, டேல்பி யென்னும் ஊரிலுள்ள ஆகாயவாணி, "இந்த உரு இவ்வாறு சிதைந்ததோடிருப்பதே கடவுளுக்குத் திருப்தி" என்று சொன்னதாக அவர்கள் மறுமொழி கூறி விட்டார்கள். பணம் கொடுத்தவர்கள் அதிக அவமான மடைந்தபோதிலும் அதை அபகரித்துக் கொண்டவர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளச் சக்தியற்றிருந்தார்கள். பின்னர் அப்பணம் ஒருபோதும் திருப்பிக்கொடுபடவில்லை. அதற்குப்பின் அநேக நூற்றாண்டுகள்

வரை இவ்விக்கிரகம் அழிபடும் வரையில் குலைந்த உருவத்தோடே நின்று கொண்டிருந்தது.

பிறகு கிரீக்ஜாதியாரும் அவர்கள் தேசமும் உரோமன் ஜாதியார் வசம் அகப்பட்டுக் கொண்டபோது ரோட்ஸ் என்னும் தீவும் அநேக காலம் வரையில் உரோம் ராஜ்யத்துக்குள் கட்டுப்பட்டிருந்தது. அதன்மேல் அதனின்றும் நீங்கித்தனியே யிருந்தது. அப்படி யிருக்கும்போது கீழ் தேசத்தாரும் மேல்தேசத்தாரும் அத்தீவை ஒரு பொருளாகவே யெண்ணாமல் விட்டு விட்டார்கள். இவ்வாறு ஒருவராலும் அநேகம் வருஷம் வரையில கவனிக்கப்படாமலிருந்த அந்தத்தீவில் சாரஸன் என்னும் முஸ்லிம் வர்க்கத்தார் பின்னொரு காலத்தில் குடியேறி, அந்தத்தீவைப் பெருமையாக மதித்து வந்தார்கள். இந்த முஸ்லிம் வர்க்கத்தாருக்கு விக்கிரக ஆராதனையும், உருவங்களை வைத்திருப்பதும் தகாதகாரியமாதலால், கொலாசஸ் என்னும் இவ்விக்கிரகம் மிக்க அருவருப்பை உண்டாக்கிற்று. ஆதலின், இவ்வுருவத்தை அவர்கள் ஒரு பொருளாக எண்ணவில்லை. அதனால், கி. பி. 672. ஆம் வருஷத்தில் இவ்விக்கிரகம் அவர்களால் இடிக்கப்பட்டு எடிஸா என்னும் நகரவாசியான ஒரு எஹூதி வர்த்தகனிடம் விலைக்கு விற்கப்பட்டது. இதற்காக அவர்கள் வாங்கிய கிரயம் (36,000) முப்பத்தாறுயிரம் பவுன். இவ்வுருவத்தில் சிலபாகம் குறைந்திருந்தாலும் இதற்கேற்பட்டிருக்கும் இந்தக் கிரயம் மிகக்குறைந்ததென்றே சொல்லக்கூடியதாயிருக்கிறது. இதுவே இப்படி யிருக்கும்போது இதன் முழு உருவமும் இருந்தால் அதன் விலை எவ்வளவாகுமோ தெரியவில்லை. இதை வாங்கின வியாபாரி இதிலிருந்த வெண்கலத்தை யெல்லாம் இடித்துப்பேர்த்து, 900. ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு சென்றானும்; அவ்வெண்கலத்தின் நிறை (10,80,000) பத்திலட்சத் தெண்பதினாயிரம் சேர் இருந்ததாம். இவ்விக்கிரகத்தை மேற்கண்டபடி அழித்தபின் ஷை ரோட்ஸ் என்னும் தீவுக்கு எவ்வகைக் கௌரவமும் உண்டாகவில்லை. காலம் செல்லச்செல்ல இத்தீவும் அழிந்து வருகிறது. இங்குள்ள துறை முகப்பட்டினங்களில் இஃதொரு முக்கியமான பட்டினமாயிருந்தபோதிலும் உலகத்தா ரெல்லோரும் இப்பொழுது இதைப் பற்றிப் பெருமை பாராட்டிப் பேசுவதில்லை. (2,500) இரண்டாயிரத்தைநூறு வருஷங்களுக்கு முன்னிருந்ததுபோலவே இப்பொழுதும் இப்பட்டினம் சாந்தமுள்ளதாகக் காணப்படுகிறது.

லோகாதிசய விளக்கம்.

---

## கேட்காமல் பணங் கொடுப்பதே கௌரவமாம்.

---

மேல்நாட்டு நாகரீகங்கள் நம் நாட்டில் வந்து புகுந்து கொள்ளவே பற்பல விநோதமான கொள்கைகளெல்லாம் நம்மவரிடத்தில் கிளம்புகின்றன; மேல் நாட்டாருடைய வியாபார ஸ்தலங்களில் அவர்கள், தங்களுக்குக் கட்டிவரக் கூடிய ஒரு விலைத்திட்டத்தைச் சாக்குகளுக் கேற்படுத்தி அவ்விலையைச் சீட்டுகளில் எழுதிச் சரக்குகளில் கட்டி வைத்திருக்கிறார்கள், அவற்றை வாங்கச்

செல்வோர் அவ்விலைகளைக் கொடுத்துவிட்டு வாங்கிக்கொண்டு போகிறார்கள். இந்தவித ஏற்பாட்டில் பெரும்பாலும் அதிகரித்த மோசமில்லை யாதலால், அவ்வகையார்க்கு ஒருவித திருப்தியே உண்டாகிறது. இந்த வழக்கத்தைப் பார்த்து விட்டுப் புது நாகரீகம் கற்ற நம் நாட்டாரில் சிலர் இவ்வாறே நடக்க ஆரம்பிக்கின்றனர். இதனால் நம்மவர்க்குப் பொருள் நஷ்டத்தோடு பல கேடுகளும் சம்பவிக்கின்றன. நம் நாட்டு வியாபாரிகள்,

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்"

என்ற திருக்குறள் நீதியைக்கடைப்பிடித்து வியாபாரம் செய்வதில்லை. பொருள் சம்பாதிக்கும் நோக்கமே இவர்களுக்கதிகம். அதனால், இவர்கள் சரக்குகளுக்கு ஒன்றுக்குப் பத்து விலை போட்டும், சமயத்துக்குத் தகுந்தபடியும் ஆளுக்குத் தகுந்தபடியும் விலை சொல்லிப் பலித்த வரையில் பிறர் பொருளை மோசமாகக் கவர வழிதேடுகின்றனர். அன்றியும் சரக்குகளிலும் போலி வஸ்துக்களையும் கெட்ட வஸ்துக்களையும் மிஸ்ரமித்து விற்கின்றனர். அரிசியிற் பொடிக்கல்லும், மாவில் குறுமணலும் புழுதியும், வெண்ணெயில் மாவும், நெய்யில் சில கொழுப்புவகைகளும் தாழ்ந்த எண்ணெய் வகைகளும், மிளகில் அதுபோன்வோர்காயும், ஏலரிசியில் நத்தைச் சூரிவிதையும், குங்குமப்பூவில் முத்துச்சோழக் கதிரின்மேலுள்ள சிவந்த மயிர் போன்ற வஸ்துவும், பன்னீரில் தண்ணீரும், இப்படியே இன்னும் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு போலிச் சரக்கும் கலந்து விற்றுப் பகல் மோசம் செய்கின்றனர்.

இந்தப்பெரு மோசக்காரருடைய வியாபாரங்களில், நம்மவரிற் சிலர் அங்கிலம் கற்றதின் பயனாக மேல் நாட்டார் ஆசாரங்களைக் கைக்கொண்டிருக்கின்றனர். இவர்கள், கடைக்குப்போய் எதையாவது வாங்குவதாயிருந்தால் நாலு கடைகளில் விலைத்திட்டத்தைப்பற்றி விசாரிப்பதில்லை. அளவு திட்டங்களைப் பற்றியும் கவனிப்பதில்லை. இவை யெல்லாம் நான்ஸென்ஸ் நாட்டுப்புறத்தார் வழக்கமென்று சொல்லித் தங்கள் அறிவை விலைக்கு விற்றுவிட்டு ஒரே கடையில் போய் அதிலொரு வீசை இதிலொரு வீசைபோடு என்கிறார்கள். அந்தோ! இவர்கள் தாய்ப்பாஷையை அவமதித்ததால் வீசையளவும் இவர்களுக்குத் தெரியாது; விலைத்திட்டமும் தெரியாது. முழுப் பாய் சுருட்டிகளாகிய கடைக்காரர்கள், இப்படிப்பட்ட நூதன நாகரீகப்புண்ணியாத்மாக்கள் எப்பொழுது வருவார்கள்? அவர்கள் பணத்தை அதிகமாக அபகரிக்கலாம் என்று எதிர்பார்த் திருப்பவர்களாதலின், இவர்களைக் கண்டவுடனே "வாங்க சார்! வாங்க சார்!! என்று ஆசனம்போட்டு உட்காரச் செய்து இவர்கள் ஒருவீசை கேட்டதற்கு அரைவீசை போட்டுப் புறு முட்டையைப் போன்ற இவர்கள் கண்களுக்கெதிரே காட்டி, 'சார்! எடை சரியாயிருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்' என்பார்கள். இவர்கள், 'உஸ்; அதையெல்லாம் என் நம்மிடம் காட்டுகிறாய்; சீக்கிரம் கட்டிப்போடு' என்பார்கள். உடனே அவர்கள் கட்டிக் கூலிக்காரன் கூடையில் போட்டுவிட்டு ஒருவீசைக் கணக்கே போட்டு விலையும் ஒன்றுக்குப் பத்தாகப்போட்டு ரூபாயை வாங்கிக் கொண்

வார்கள். இன்னும் காப்பிஹோட்டலுக்கு இந்தத் துரைகள் போய்விட்டாலோ வெகுவேடிக்கை. கள்ளுக்கடை, தாசிவீடு, சூதாடுமிடம், நாடகமேடை இவைகளைப்போலவே மனிதர் குடியைக்கெடுத்து வாயில் மண்ணைப்போடுவதில் காப்பிஹோட்டலும் சிறந்த ஒன்றே. காப்பிக் கிளப்பில் ஒருஅணு செலவில் முடியும் பலகாரத்திற்கு ஒருரூபா விலை போடப்படுகின்றது. அங்குள்ள காப்பியோ மடிந்த சத்தில்லாத விலை சரசமான கொட்டையிலாவது, சிகைக்காய்க் கஷாயத்திலாவது, சர்க்கரையைக் கருக்கிச் செய்த கஷாயத்தாலாவது செய்யப்படுகின்றது. பாலோ வெள்ளைநீர்; இத்தகைய வயிற்றெரிச்சல் காப்பியில் தொண்டைவரைகூட நனையாத அளவுள்ள கப் ஒன்றுக்கு ஒன்றே கால் அணு விலை. இதற்கு அடங்கிய செலவு காலணுவிராது. நெய்யோ குசும்பா எண்ணெய். இந்தலக்ஷணத்தில் மேற்கூறிய நம் போலித்துரைமார்கள் காலைமாலை நேரங்களில் சிங்காரித்துக்கொண்டு சிநேகிதர்களுடன் காப்பி ஹோட்டலுக்குப் புறப்பட்டு விடுகிறார்கள். இவர்களைக் கண்டவுடன் அங்குள்ள பரிசாரகர்கள் தட்டுக்களில் எவை யெவற்றையோ நிரப்பிக் கொண்டுவந்து மேஜைமேல் வைத்து விடுகிறார்கள். இவர்கள் மாமியார் வீட்டில் மருமகன் சாப்பிடுவதுபோல் அவற்றைத் தொட்டுப் பார்த்துவிட்டுச் சரியாய்க்கூடச் சாப்பிடாமல் எழுந்துவிடுகிறார்கள். பரிமாறுகிறவர்கள் அவற்றிற்கு ஒன்றிற்கு நான்காக விலைபோட்டு ஒரு சீட்டையெழுதி இவர்கள் கையில் கொடுத்து விடுகிறார்கள். இவர்கள் அதைக் கொண்டுபோய் கேட்டிலிருக்கும் காப்பி ஹோட்டல் தலைவர் மேஜைமேல் போட்டுச் சில ரூபாய் நோட்டுக்களை விசிறி யெறிகிறார்கள். அவர் இஷ்டமானதை யெடுத்துக்கொண்டு மீதி எவ்வளவு கொடுத்தாலும் சரி அதைவாங்கிச் சேபியில் போட்டுக்கொண்டு சடக்குப் புடக்கென்று வெளியேறி விடுகிறார்கள். இவர்கள் நாம் எவ்வளவு சாப்பிட்டோம், எவ்வளவு கொடுக்கவேண்டும், எவ்வளவு சில்லரை மீதி வரவேண்டும் என்பவைகளைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை. எல்லாம் சரியாயிருக்குமென்பது இவர்கள் நம்பிக்கை. இவர்கள் கூடச்சென்றவர்களில் எவரேனும் புத்திசாலி யொருவர் இருந்து அவற்றை விசாரிக்கப் புகுந்தாலோ இவர்களுக்குப் பெருங்கோபம் வந்துவிடுகிறது. 'நாட்டுப்புறத்துப் பீடைகளை அழைத்துக்கொண்டு வந்தது நமக்குக் கௌரவக் குறைச்சலாயிருக்கிறது' என்று அவர்களை இவர்கள் வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்கள்.

அந்தோ! இந்த வழக்கத்தால் எவ்வளவோ பொருள் நஷ்டமும் கேடும் விளைகின்றன. இத்தகைய இடங்களில் பெரிய மோசங்கள் நடப்பனவாயிருந்தும் அவைகள் இவர்களுடைய மந்தமதியிற் படவில்லை. இவர்கள் புதிதாகக் கற்றுக்கொண்ட நாகரீகத்தின் பயன் இதுதான். இதனால் அநேகர் கெட்டே போகின்றனர். இப்பேர்ப்பட்ட புத்திமான்கள் அதிகப்பட்டதனால்தான் நம் நாடு இத்தகைய பரிதாப நிலைமைக்கு வந்துவிட்டது. இந்த மதியீன வழக்கங்களெல்லாம் அடியோடொழிந்து நம் நாடு க்ஷேமப்படும் நாளெந்நாளோ! எல்லாம் வல்ல இறைவன்றான் இப்பேதையரின் புத்தியைத் திருத்தி யமைக்க வேண்டும்.

தேசோபகாரன்.

## தருமோபதேசம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-5, சஞ்சிகை-10, பக்கம்-239.)

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மதங்கொண்டு மெய்யுணர்ச்சி சிறிது மின்றி
மனதிலே தெய்வபக்தி மருவ லின்றி
இதங்கொண்ட மெய்யறிஞர் வருந்து மாறு
ஏதேதோ கண்டவர்போல் நடித்துப் பொய்யின்
விதங்கொண்டு ஞானிகளைக் கண்டபோது
மேவுமுங்கள் மதமென்ன வென்று கேட்டுக்
கதங்கொள்ளப் புரிகின்ற மடையர் தம்மைக்
கழுதையினுங் கடையரெனக் கழற லாமே. (சுக)

விரும்பியொரு காரியத்தை முடித்துக் கொள்ள
வேண்டியவ ரிடத்துண்மை விளம்பி டாமல்
அரும்பிரயா சைப்பட்டுப் பொய்யே பேசி
அவர்க்குமஃ தவசியமென் றெடுத்துக் காட்டி
வரும்பெரிய நலமுங்கட் கிஷ்ட முண்டேல்
வழுத்துமிதை முடித்திடுங்க ளென்றச் செய்கை
விரும்பாதார் போலிருந்து முடிக்கப் பார்க்கும்
விவேகமற்ற சண்டிகட்கு மேன்மை யின்றே. (சுஉ)

வேலைசெய்வோர் தங்களிடம் நயங்கள் பேசி
வேண்டியதம் காரியத்தை முடித்துக் கொண்டு
வேலைசெய்தோர் கூலிக்குச் சென்ற காலம்
மீசைமயிர் துடித்திடவே சிம்மம் போல
காலனெனக் கொதித்தெழுந்து கடின வார்த்தை
கழறுகின்ற மனிதர்களின் காரி யங்கள்
ஞாலமதில் சிறப்பாக முடிவு றாமல்
நஷ்டமிகு மவர்க்குநல்ல பெயரி ராதே. (சுங)

சேம்பையார்.

## புதிய நாகரீக விவேகிகள்.

இப்பொழுது புதிய நாகரீகத்தை யனுசரித்து நீதிபேசும் சில விவேகிகள் தோன்றி யிருக்கின்றனர். இவர்களுடைய கொள்கைகள் மிக விநோதமா யிருக்கின்றன. இவர்கள், ஒரு வகுப்பாரில் நற்கல்விகற்ற விவேகிகளாயிருப்பவர்கள் தங்கள் வகுப்பாரிடத்திலுள்ள துர்க்குணங்களையெடுத்துப் பேசிக் கண்டித்தால் "தங்கள் வகுப்பிலுள்ள குற்றத்தைத் தாங்களே கூறினல், அன்னியர் அவமதிப்பார்கள்; ஆதலால், அது கூடாது" என்கின்றனர். பொது ஜனங்களிடத்திலுள்ள குற்றங்களைக் கூறினல்அவர்களுக்கு அதிருப்தி யுண்டாகும்; ஆதலின், அதுவும் கூடாது என்கின்றனர். பெரியோர்களைப் போல வேடமிட்டு உலகத்தை ஏமாற்றும் சில வேடதாரிகளைப் பற்றிக் குறைகூறினல் பெரியோர்களுக் கெல்லாம் ஆயாசம் வருமென்கின்றனர். ஸ்திரீகளின் துர்க்குணங்களைப்பற்றிப் பேசினல் இந்திய மாதர்களுக்கெல்லாம் கோப முண்டாகுமென்கின்றனர். சில தனவந்தர்களிடத்திலுள்ள அடாச் செயல்களைப் பற்றிப் பேசினல் பிரபுக்களுக்கெல்லாம் பெருமை கெடுமென்கின்றனர். சில வித்வான்களிடத்திலுள்ள குணக்கேட்டைக் கூறினல் வித்வான்களுக் கெல்லாம் வெறுப்புண்டாகு மென்கின்றனர். இப்படியே இன்னும் எந்த எந்த வகுப்பாரைப் பற்றிக் குறைகூறினலும் அந்த அந்த வகுப்பாருக்கு அதிருப்தி ஏற்படுமென்று பேசுகிறார்கள். இந்தக் கொள்கையைப் பிரசங்கங்களிலும் பேசுகிறார்கள்; புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் எழுது கிறார்கள்.

இவர்களுடைய இந்தக் கொள்கைகளை அனுசரித்தால் உலகத்தில் எந்த வகுப்பினருடைய குறைகளையும் எடுத்துக்கூறி நீதிவகுக்க ஏதுவில்லாமற் போகின்றது. ஆதலின், நீதிகூறி மனிதர்களை நல்வழிப்படுத்துதல் எந்த வழியில் அமையுமோ தெரியவில்லை. உலகத்தில் கெட்டவைகளைக் கண்டித்தால் தானே நன்மை நிலைநிற்கும். இவர்களுடைய கொள்கையை நிலைநிறுத்தினல் அநீதியன்றோ தலை யெடுத்தாடும்.

நம்முன்னோர்கள் செய்த நூல்களிலெல்லாம் ஒவ்வொரு வகுப்பாரிடத்திலுமுள்ள துர்க்குணங்கள் வெளிப்படையாக எடுத்துக்கூறிக் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. அதனல் பண்டைக்காலத்தவர், அந்நூற்களைப் படித்துணர்ந்து பெரும்பான்மையும் நன்மார்க்கங்களில் ஒழுகி வந்தனர்; தருமம் தலையெடுத்தோங்கியது; நாடும் செழிப்புற்றிருந்தது. இக்காலத்தில் இத்தகைய புதிய குருட்டுப் புத்திமான்கள் பரவப்போய் நீதிநூற்பாடங்கள் குறைந்துவரத் தலைப்பட்டு விட்டன; துராசாரங்கள் வளரத்தலைப்பட்டு விட்டன; மதியீனங்கள் மலிந்து வருகின்றன. இக்காலத்திய வித்தியார்த்திகளில் பெரும்பான்மையோர் தாய்ப்பாஷையிலுள்ள அருமையான நீதி நூற்களைக் கல்லாமல் அன்னிய பாஷைகளிலும் ஆசாரங்களிலும் அபிமானம் வைத்து அவைகளிலும் நல்லன தள்ளிக் கெட்டன கொண்டொழுகுதலாலேயே இந்தப் பேதைமையான அபிப்பிராயங்களெல்லாம் கிளம்புகின்றன. இக்காலத்துப் புதிய நாகரீகநீதி, கெட்டதைச் செய்யும் ஒருவனை, 'நீயேன் இதைச் செய்தாய்?' என்று அறிஞர் வின

விஞல் அவன், "என்னிஷ்டப்படி நான் அதைச் செய்கிறேன்; வேறொருவர் என்னைக் கண்டிப்பதற்கு என்னருல் இருக்கின்றது?" என்று பதில் கூறுந் தன்மைக்கு வந்திருக்கிறது. மனைவி செய்யும் குற்றத்தையும் புருஷன் கண்டிக்கக் கூடாதென்பதும் ஒரு நாகரீகநீதியாய்க் கிளம்பிவிட்டது. இதுவே இக் கதியிலிருக்கும்போது மற்றவைகளைப் பற்றிப் பேசுவானேன்! நம்மவரில் சிலருடைய அறியாமையால் நம் நாட்டிற்கு நேர்ந்து வரும் இக்கேடுகளை யெல்லாம் பகவானே நீக்கி யருளவேண்டும்.

நெறிக்கிழவன்.

---

## விநோதகதைத் திரட்டு

(முன்தொடர்ச்சி-புத்தகம்-5, சஞ்சிகை-8, பக்கம் 182.)

### செல்லாததற்குச் செட்டியார் இருக்கிறர் என்ற கதை.

ஓர் ஊரிலுள்ள ஒரு செட்டியாரிடத்தில் சொக்கன் என்ற ஒரு வேலைக்காரனிருந்தான். அவன் சட்டியளவு அன்னம் சாப்பிடும் பெரிய தடிராமன். விவேகமற்றவன். வாயாடித்தனமாகப் பேசுகிறவன். எஜமான் ஒன்றைச் சொன்னல், தான் வேறொன்றைச் செய்பவன். இப்பேர்ப்பட்ட வேலைக்காரனை வைத்துக் கொண்டிருந்த அந்தச் செட்டியார் அதிகப்பணத்தை யெடுத்துக்கொண்டு வெளியூர்க்குப் போக ஒருநாள் புறப்பட்டார். அப்பொழுது தாம் பணம் கொண்டுபோவது யாருக்கும் தெரிந்தால் அது கொள்ளை போய்விடும் என்று அவர் பயந்து பணத்தை அரிசி மூட்டைபோல் கட்டிச் சொக்கன் தலையில் வைத்து அவனிடம், "அடே! நம்மிடம் பணமிருப்பதைப் பற்றி ஒன்றும் பேசாமல் வா" என்று சொல்லி அவனை அழைத்துக்கொண்டு போனர். அவன் வாயாடி யானதால் நடு வழியில் செல்லும்போதே செட்டியார் சொன்னதை மறந்து பல ஜனங்களுக்குக் கேட்கும்படி 'ஐயா! இந்தப் பணத்தை எங்கே கொண்டுபோகிறீர்கள்?' என்று பேச ஆரம்பித்தான். அவர் திடுக்கிட்டு அவன் வாயை அடக்கிக்கொண்டே போனர். நடுவழியில் சூரியன் அஸ்தமித்து விட்டது. இரவானதும் செட்டியார் பிரயாணம் செய்யப்பயந்து ஒரு நடுக்காட்டில் வழியை விட்டொதுங்கி இரகசியமாகப் படுத்துக் கொள்ளப் போனர். சொக்கன் 'நான் வழியில்தான் படுத்துக்கொள்வேன்; காட்டிற்குள் வரமாட்டேன்' என்று பாதையின்மேல் படுத்துக் கொண்டான். அப்போது செட்டியார் அவனை நோக்கி, 'நீ அங்கே படுத்தால் திருடர்கள் உன்னைக்கண்டு கொண்டு என்னையுங் கண்டு

பணத்தைப் பிடுங்கிக் கொள்வார்கள்; நீ என்னிடம் வந்துவிடு' என்று கெஞ்சினர். அவன் வரமாட்டேனென்றதோடு பெருஞ்சத்தம் போட்டுப்பாட்டுப்பாட ஆரம்பித்தான். செட்டியார் பெருந்திகிலடைந்து, 'சொக்கா! பேசாமலாவது படுத்துக்கொள்' என்று வேண்டினர். அதன்மேல் சொக்கன் கவலை யற்றவனாதலால் நன்றாய் உறங்கி விட்டான். செட்டியார் பண மூட்டையை வாங்கி வைத்துக்கொண்டு திகிலோடு தூங்காமல் படுத்திருந்தார். பாதிச்சாமத்தில் சில திருடர்கள் வந்தார்கள். அவர்கள் நடந்து செல்லும்போது சொக்கன் அவர்களுடைய காலில் தட்டுப்பட்டான். அப்போது திருடர், 'காலில் அடிபட்டது கட்டையோ' என்றார்கள். சொக்கன் ஒரு பணத்தை முடிந்துகொண்டு படுத்திருந்தபடியால், 'கட்டை இப்படித் தான் படுத்திருக்குமோ ஒரு பணத்தையும் முடிந்துகொண்டு' என்றான். திருடர் உடனே சொக்கனுக்கு இரண்டு உதை கொடுத்து அவனிடமிருந்த ஒரு பணத்தையும் பிடுங்கொண்டு, 'இது செல்லுமோ செல்லாதோ' என்று தடவிப் பார்த்தார்கள். உடனே சொக்கன், 'செல்லாவிட்டால் அதோ செட்டியார் படுத்திருக்கிறார்; அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று செட்டியார் படுத்திருக்குமிடத்தைக் காட்டிவிட்டான். செட்டியார் தலையில் இடிவிழுந்தது போலாய் விட்டது. திருடர்கள் ஒரேபாய்ச்சலில் செட்டியாரைப் பிடித்தடித்து அவரிடமிருந்த பணத்தையும் பறித்துக்கொண்டு போய் விட்டார்கள். செட்டியார் சொக்கனைத் திட்டினர். சொக்கன் "பணம்போனது நல்லதுதான்; அது இருந்தால் இன்னும் தொல்லைதானே வரும்" என்று செட்டியாருக்குச் சமாதானம் கூறினன்.

கதாசாகரன்.

---

## தகவுரை.

தெய்வபக்தன்:—

இஃது ஒவ்வொரு தமிழ்மதிக் கடைசித் திங்கள்தோறும் வெளிவரும் செந்தமிழ்ப் பத்திரிகை. இதில் கூட்டுறவின் குணம், தெய்வஸ்தல மான்மியங்கள், தர்மஸ்தாபன செய்திகள், அறவுரைகள், நீதிமஞ்சரி, உண்மை, நடுநிலை, தேசவர்த்தமானங்கள், பொது வர்த்தமானங்கள், பொது நீதி வியாசங்கள், ஜனோபகார விஷயங்கள் முதலியன பிரசுரமாகி வருகின்றன. தமிழ் நாட்டினர் நன்மையடைதற்கு இஃதின்றியமையாததாம். வருடசந்தா வெளிநாடுகட்கு ரூ. 5-0-0 உள் நாட்டிற்கு ரூ. 3-0-0 இதனை வேண்டுவோர், "P. S. கிருஷ்ண மூர்த்தி ஐயர், பத்திராதிபர், தெய்வபக்தன் ஆபீஸ், கும்பகோணம்" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மகாகஷ்டமான சர்வமேகரோகங்களையும் போக்கி
இரத்தவிர்த்தியையும் தாது புஷ்டியையும்
தேகதிடத்தையும் தரத்தக்க

# அமிர்தசஞ்சீவி லேகியமும் ஸ்தம்பனுதி செந்தூரமும்.

பால்ய சேஷ்டையாலும் அறிவீனத்தாலும் தீக்குணமுடையோர் சினேகத்தாலும் பற்பல தகாத செய்கைகளினாலும் விஷய இன்பத்தில் அளவுமீறி நடந்து, தேகமெலிந்து தாதுநீர்த்து இடுப்பு கைகால் முதலிய அவயவங்கள் பல ஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து கிழத்தன்மை யடைந்து, சோம்பல் நித்திராபங்கம், சதாகாலமும் சிற்றின்பத்தில் கவலை, மனோவேதனை முதலியவற்றிற்கு ஆளாகி நிற்கும் புருஷர்களுக்குச் சகல துர்க்குணங்களையும் போக்கிச் சுகத்தைத் தரக்கூடிய இன்ப அமிர்தங்கள் இவைகளே.

இவற்றுள் அமிர்தசஞ்சீவி லேகியத்தில், கல்நார் பஸ்பம், அயச்செந்தூரம், வங்கபஸ்பம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, பொன் அம்பர், பாதம் பருப்பு, அக்ரோட்பருப்பு, சில்கூஜாப் பருப்பு, வெள்ளரி விதை, முள்ளங்கி விதை, நாயுருவி விதை, பூனைக்காலி விதை, இஸ்கூல் விதை, முதலியனவும், 96-வித கடைச்சரக்குகளும், சாலாமிஸ்றி, சப்பேத்மிஸ்றி, போஜிதான் மிஸ்றி, சூரஞ்சான் முதலிய பலவித மிஸ்றிகளும், அரிய பல சிலாக்கிய மமைந்த சஞ்சீவிக்குச் சமானமான மலை மூலிகைகளின் சத்துக்களும், பசுநெய், மலைத்தேன், பசும்பால், முதலியவையும் அளவுக் கிரமப்படி சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் சேர்ந்த இவ்வற்புத லேகியம் கைபாகம் செய்பாகந் தவறாமல் வெகு ருசிகரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்கூறிய ஸ்தம்பனுதி செந்தூரமும் சித்தர் முறைப்படி உயர்வாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஆகாரவிஷயத்தில் யாதொரு நிர்ப்பந்தமும் பத்தியமு மில்லாமலே, பலவித தேகஸ்திதி யுடையவர்களும் இந்தப் பரமசிரேஷ்டமான லேகிய பஸ்யங்களை எல்லாக்காலத்திலும், எல்லாத் தேசத்திலும் சந்தேகமின்றிச் சாப்பிடலாம்.

இவ்வளவு அருமையாகச் செய்து முடித்திருக்கும் இந்தக் குருமுறை லேகியத்தையும் செந்தூரத்தையும் ஒருமுறை 48-நாட்கள் ஒருவர் புசித்தால் அவரிடம் நபும்ஸகத்தன்மையிருந்தாலும் நீங்கிவிடும். துரிதஸ்கலிதம், சொப்பனஸ்கலிதம் இருக்குமிடம் தெரியாமல் ஓடிப்போம். ஆண் அங்கத்தின் சோர்வு அடியோடு நீங்கிவிடும். கை கால் அசதி, இடுப்புநோய், நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல், தூர்த்தஸ்திரீகளின் சகவாசத்தினால் உண்டான வெள்ளை, கொருக்கு, மேகத்தடிப்பு, மேக ஊறல், மேகவெட்டை முதலிய பயங்கரமான ரோகங்களும் பெருங்காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல் பறந்துபோம். இதற்குமுன் எப்போதும் உண்டாகாத அநேக அற்புதகுணங்கள் தோற்றும். இக்குணங்களை ஒரேமுறை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

---

சுகானந்த வைத்திய சாலா.

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழுநம்பிக்கை வைத்து ஒரேயொருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானல் அவர்கள் அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இந்த லேகிய செந்தூரங்களினல் உண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின், இவற்றிற்கு மற்றவரிடம் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள் நேயர் முதலியோர்க்கு நீங்களே இவற்றின் சிறந்த குணத்தையும், நீங்கள் இவற்ருலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக் கூறிச் சிபாரிசு செய்வீர்களென்பது நிச்சயம்.

நாம் இந்த அமிர்தசஞ்சீவி லேகிய செந்தூரங்களைப்பற்றி ஏன் இப்படிப் பன்னிப்பன்னிக் கூறுகிறேமென்ருல் இவற்றின் குணங்கள் அவ்வளவு சிறந்தவை. இந்த லேகிய செந்தூரங்களை விசேஷமாய் நாம் கையாள ஆரம்பித்து ஏறக்குறைய 80-வருஷங்கள் ஆகின்றன. இது வரையில் இவற்ருல் நமக்கு நல்லபெயரும் கீர்த்தியும் உண்டாய் வருவதோடு எண்ணிறந்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் கிடைத்து வருகின்றன. சிற்றின்ப சுகத்தை இஷ்டப்படி அனுபவிக்கும் ஆற்றலைத் தருவதில் முதன்மையானவை இந்த லேகியசெந்தூரங்களே யென்று எமது அனுபவத்தில் கண்டு தீர்மானித்திருக்கிறேம்.

1-மண்டலம் 48-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய

செட் 2-க்கு ரூ. 6 0 0

½-மண்டலம் 24-நாள் சாப்பிடக்கூடிய லேகிய செந்தூரங்கள் அடங்கிய

செட் 1-க்கு ரூ. 4 0 0

---

## கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை.

கனவான்களே!

கலியாணத்தில் தாலிக்கட்டுவதைக்கூட மறந்து விடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது. இக்கதை முழுவதையும் படித்துப் பார்த்தால் தாலிகட்ட மறந்துவிடுவதற் கேற்பட்ட காரணங்களும், இன்னும் பல விஷயங்களும் மிக வேடிக்கையாய் விடாநகைப்பை யுண்டாக்கும். இப்புத்தகத்தில் எந்தப் பக்கத்தைப் படித்தாலும் அடங்காச் சிரிப்பேயுண்டாகும்.

இப்புத்தகம் விலை அணு 5.

---

## மலையை விழுங்கிய மகாதேவன் கதை.

---

இது, அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க அரிய தமிழ்க் கதை. "மலையை விழுங்கிய மகாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளமாம்" என்ற பழமொழிக்கிணங்க இதில் மகாதேவன் என்னும், 'சண்டப்பிரசண்ட யுகசண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திமிர்ப்புளுக ஜெகஜாலப்புரட்டன், செய்யும் பகல்மோசம், இராமோசம், மதிமோசம், சதிமோசம் முதலிய பல ஏமாற்றுச் செய்கைகளெல்லாம் மிக்க அற்புதமாயிருக்கும். இக்கதையில் முக்கியமாக நல்ல விவேக முண்டாகும். இதன் விலை அணு 0 6 0

---

சுகானந்த வைத்திய சாலா,

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை,

# சிறந்த தமிழ் நூல்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| இராமாயணப்பாட்டு சப்தகாண்டம் 2-வால்யம் | 6 | 0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதகவி | 3 | 0 |
| நல்லாப்பிள்ளை பாரதக்கவி | 9 | 0 |
| ஆரியப்புலவர் பாகவதப்பாட்டு | 3 | 8 |
| ஐயங்கார் பாகவதம் 1-வது | 2 | 8 |
| ஷை 2-வது | 2 | 8 |
| நாலாயிரப்பிரபந்தம் இராக தாளத்துடன் | 3 | 8 |
| நித்தியானுசந்தானம் இராக தாளத்துடன் | 1 | 0 |
| வடகலை நித்தியானுசந்தானம் | 0 | 12 |
| முதலாயிரம் தனி ஒஸ்தி | 0 | 12 |
| திருவிளையாடல் பாட்டு | 2 | 8 |
| பிரபுலிங்கலீலை | 0 | 12 |
| பிரமோத்திரகாண்டம் உரையுட | 1 | 8 |
| அரிச்சந்திரபுராணம் உரையுட | 1 | 4 |
| நைடதம் பாட்டு உரை | 2 | 8 |
| நைடதவுரை சாதாரணபதிப்பு | 1 | 0 |
| நைடதம் விருத்தியுரை புதியபதிப்பு படத்துடன் | 3 | 8 |
| ஷை மூலம் தனி | 1 | 0 |
| அருணாசலபுராணம் படத்துடன் பாட்டு உரை | 1 | 8 |
| கைவல்லிய நவநீதம் மூலம் உரை | 0 | 8 |
| மேற்படி கிளேஸ் | 0 | 12 |
| மேற்படி பொன்னம்பல சுவாமி விசேட விருத்தியுரை | 2 | 0 |
| தனிப்பாடற்றிரட்டு பாட்டுஉரை | 1 | 8 |
| மேற்படி 2-ம் பாகம் பாட்டு உரை | 1 | 8 |
| பாலகாண்டம் பாட்டு உரை | 3 | 8 |
| அயோத்தியா காண்டம் உரை | 3 | 8 |
| ஆரணியகாண்டம் உரை | 3 | 8 |
| சுந்தரகாண்டம் உரை | 3 | 8 |
| நன்னூல்காண்டிகை விருத்தியுரை ஒஸ்தி | 2 | 0 |
| நாலடியார் உரை ஒஸ்தி | 1 | 8 |
| திருக்குறள் உரை படத்துடன் | 2 | 8 |
| மேற்படி மட்டம் | 1 | 0 |

## வசன காவியம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ மகாபாரத வசனம் சாதாரண பதிப்பு 4-வால்யம் | 8 | 0 |
| மேற்படி. திக்கு கடிதம் 4-வால்யம் | 10 | 0 |
| மகாபாரதச் சுருக்கம் | 3 | 0 |
| விராடபர்வம் படத்துடன் | 0 | 12 |
| பாகவத வசனம் | 3 | 0 |
| வால்மீகிராமாயணம் செட் | 15 | 0 |
| கம்ப இராமாயணவசனம் லெத்தகிராப் படத்துடன் 2-வால்யம் ஒஸ்திபதிப்பு | 5 | 0 |
| மேற்படி மட்டம் ஒரே கட்டடம் | 3 | 0 |
| தத்துவசங்கிரக ராமாயணம் | 3 | 8 |
| அத்தியாப்த ராமாயணம் | 2 | 8 |
| இராமாயண சுருக்கம் | 0 | 4 |
| திருவிளையாடற்புராண வசனம் 64-படங்களுடன் | 1 | 8 |
| மேற்படி கிளேஸ் | 2 | 8 |
| பெரியபுராண வசனம் 72-படங்களுள்ளது | 1 | 8 |

## கீர்த்திபெற்றவர் சரித்திரம்.

| | | |
|---|---|---|
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 |
| ஸ்ரீமகாபக்த விஜயம் 6 தாசர்களின் சரித்திரம் படத்து | 1 | 8 |
| மேற்படி திக்கு படத்துடன் | 2 | 0 |
| மேற்படி இரண்டாம் பாகம் | 2 | 8 |
| மேற்படி 3-வது 4-வது பாகம் | 2 | 8 |
| பக்தலீலாமிர்த வசனம் 82-பக்தர்கள் சரித்திரம் | 3 | 0 |
| ஸ்ரீசங்கரவிஜயம் படத்துடன் | 1 | 0 |
| விவேகாநந்த விஜயம் | 1 | 4 |
| பக்தமாலா | 3 | 0 |

## சந்நதி முறை.

| | | |
|---|---|---|
| திருப்போரூர் சந்நதிமுறை | 0 | 12 |
| திருவரங்கச் சந்நதிமுறை | 0 | 3 |


தர்மசீலன் புக்டிபோ

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

## தோத்திரங்கள்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மூவர் அடங்கன்முறை | 5 | 0 |
| திருவாசகம் மட்டம் | 0 | 8 |
| திருவாசகம் தனி ஒஸ்தி | 0 | 8 |
| திருவாசகம் உரை | 2 | 0 |
| திருமுருகாற்றுப்படை | 0 | 2 |
| விநாயகர் சொத்து பிரபந்தத்திரட்டு | 0 | 12 |
| மேற்படி கிளேஸ் | 1 | 0 |
| விநாயகர் சிவ சத்தி கவசங்கள், சலகலாவல்லி மாலை என்னும் சரஸ்வதிதோத்திரம், இலக்குமிஸ்தோத்திரம் | 0 | 2 |
| கந்தர் சஷ்டி கவசம் | 0 | 1 |
| இடும்பன் கடம்பன் கவசம் | 0 | 1 |
| கந்தர்கவசம் | 0 | 1 |
| கந்தரனுபூதி 100-பாடல் | 0 | 1 |
| மேற்படி 50-பாடல் | 0 | 1 |
| அனுமாரநுபூதி | 0 | 1 |
| நக்கீரர் விநாயகரகவல் | 0 | 1 |
| கபிலரகவல் | 0 | 1 |
| சிவஸ்தலமாலை | 0 | 1 |
| தணிகைக் கலம்பகம் | 0 | 1 |

---

## வேதாந்த சித்தாந்தம்

| | | |
|---|---|---|
| விநாயகமான்மியம் | 1 | 8 |
| கொலை மறுத்தல் | 0 | 5 |
| வைராக்கிய சதகம் | 0 | 5 |
| வைராக்கிய தீபம் | 0 | 5 |
| பரமானந்த தீபம் | 0 | 2 |
| சிவானந்த போதம் | 0 | 3 |
| பஞ்சதசப் பிரகரணம் | 1 | 0 |
| வாசுதேவ மனனம் | 1 | 0 |
| வள்ளலார் சாஸ்திரம் | 1 | 8 |
| ஒழிவிலொடுக்கம் | 0 | 12 |
| சொரூபசாரம் | 0 | 1 |
| சிவதத்துவ விவேகம் | 0 | 2 |
| சிவபுண்ணியத்தெளிவு | 0 | 2 |
| சிவபோகசாரம் | 0 | 2 |
| பதிபசுபாச விளக்கம் | 0 | 1 |
| பாடுதுறை | 0 | 2 |
| மகாவாக்கியம் | 0 | 12 |
| ஔவைக்குறள் மூலம் | 0 | 2 |

## நீதி நூல்கள்.

---

நீதிக் கொத்து:—இதில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி இவ்வாறின் மூலமும், உரையும் அடங்கியுள்ளன. விலை அணா 6.

நீதிநூற்றிரட்டு:—இதில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் இவ்வேழின் மூலமும், அவற்றின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும் அடங்கியுள்ளன. விலை அணா 8.

நீதிச் செய்யுள் திரட்டு:—இதில் குறள், நாலடியார், தேவாரம், திருவாய்மொழி முதலிய பல நூல்களிலிருந்து சிறந்த நீதிகளைப் போதிக்கும் செய்யுள்கள் எடுத்துத் திரட்டப்பட்டுள்ளன. விலை அணா 2.

பாரத நீதி:—வடமொழி வியாஸபாரதத்தில் ஆர்யமத தர்மங்களையும், நீதிகளையும் பற்றிச் சொல்லியுள்ள நீதிவாக்கியங்களடங்கிய கிரந்த சுலோகமும், தமிழ் தாத்பரியமும். விலை அணா 2.

பிரச்நோத்தர ரத்ந மாலிகை:—ஆர்யமத தர்மங்களையும் நீதிகளையும் திரட்டி ஸ்ரீ சங்கராசாரியர் வடமொழியில் வினுவிடை ரூபமாக இயற்றியுள்ள அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. விலை அணா 2.

மாதரொழுக்க இலக்கணம்:—இதில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய விதங்களும், கற்புடைய ஸ்திரீகளின் பிரபாவமும் அடங்கியுள்ளன. விலை அணா 2.

## (பாக சாஸ்திரங்கள்.)

| | | |
|---|---|---|
| பதார்த்தகுண சிந்தாமணி | 1 | 0 |
| பூஞனி பதார்த்த குணசார சங்கிரகம் | 0 | 12 |
| நளவீம பாக சாஸ்திரம் | 0 | 12 |
| இங்கிலீஷ் தமிழ் சூக்ஷுதி | 1 | 0 |

---

தர்மசீலன் புக்டிபோ,

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

## ஜயங்கொண்ட சோழபுரம், வா-கிருஷ்ணசாமிக் கோனாரியற்றிய

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமகாபாரதம், ஆதிபர்வம், சபாபர்வம், அடங்கிய முதற்பாகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ளது | 0 | 3 | 0 |
| ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிசிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம் | 0 | 3 | 0 |
| ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு விலை | 0 | 2 | 0 |
| இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| நற்குலசேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு முதற்பாகம் | 0 | 2 | 0 |
| ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| அல்லி அர்ஜுனு திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு முதற்பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை அல்லி அர்ஜுனு இரண்டாம்பாகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| கோவலன் சரித்திரத் திருபுகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு முதற்பாகம் புத்தகம் 1-க்கு | 0 | 2 | 0 |
| ஷை இரண்டாம் பாகம் புத்தகம் 1-க்கு | 0 | 2 | 0 |

## திருசிரபுரம் கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான், பாரீஸ், தில்லானுடோமரி அடங்கியது விலை அணு | 0 | 5 | 0 |

## கும்பகோணம் புத்தகஷாப்பு கே. கதிர்வேல்பிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| தேசிங்குராஜன் கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| நந்தனார் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| சாவித்திரி சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| ஷை சாவித்திரி சத்தியவான் 2-ம் பாகம் | 0 | 2 | 0 |
| மயில்ராவணன் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 3 | 0 |
| பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு | 0 | 2 | 0 |
| ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு, (இதிலுள்ள கீர்த்தனைகள் வெகு குதூஹலமுண்டாக்கும்) | 0 | 4 | 0 |

## டிராமா வேலூர் நாராயணசாமிபிள்ளை இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| பலவித வர்ணமெட்டுகளுடன் சுப்பிரமணியர் காவடிச்சிந்து | 0 | 2 | 0 |
| கிருஷ்ணமாயை காவடிச்சிந்து | 0 | 2 | 0 |

---

**தர்மசீலன் புக்டிபோ,**

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

## புதிய புத்தக விளம்பரம்.

# ஜைன புத்தகங்கள்.

### நரிவிருத்தம் மூலமும் உரையும்.

நரிவிருத்தமென்னும் நூலானது, சங்க இலக்கியங்களுள் முதன்மை பெற்றதாகிய சீவகசிந்தாமணியை இயற்றிய ஆசிரியர் திருத்தக்கதேவரால் செய்யுட்களால் இயற்றியருளப்பட்ட சிறந்த நீதி நூலாகும். இதில் செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, முதலியன விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதோடு மனிதர் செய்யத்தக்க தருமங்கள் இன்னவை யென்பதும், செய்யத்தகாத கருமங்கள் இவையென்பதும் பற்பல உதாரணங்களுடன் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. புத்தி புகட்டத்தக்க பற்பல விநோதமான ஜைனக்கதைகளும், ஜைனமதக் கோட்பாடுகளும், பொது நீதிகளும் நிறைந்திருக்கின்றன. இதற்கு விருத்தியுரை யெழுதி இப்போது வெளிப்படுத்தி யிருக்கின்றோம். தமிழ் மக்கள் எல்லோருக்கும், இன்றியமையாத அவசியமான நூல். இதனை வாங்கி வாசிப்பதால் அநேகம் நீதிகள், பற்பல விநோதக்கதைகள், ஜைன மததத்துவங்கள் முதலியவற்றை யுணர்வதோடு இலக்கிய இலக்கணங்களிலும் தேர்ச்சியுறலாம். இதன் விலை அணா நான்குதான்.

### சமந்தபத்திராசாரியரின் திவ்விய சரித்திரம்.

இதில், ஜைன மதத்தை நிலைநாட்டினவரும், எல்லா ஆசாரியர்களாலும் சூடாரத்தினம்போல் கொண்டாடப் பட்டவருமான ஸ்ரீஸ்வாமி சமந்த பத்திராசாரியரின் ஜீவிய சரித்திரம் விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது. இது, ஜைனருக்கும் மற்றையருக்கும் மிகப் பயன்படக்கூடியது. விலை அணா ஒன்றுதான். வி. பி. யில் அதிகமாகுமாதலால் வேண்டுவோர் ஒன்றரையணா ஸ்டாம்பனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஜீவசம்போதனை முதற்பாகம்.

இந்நூலானது, துவாதசானுப்பிரேக்ஷையென்றும் சொல்லப்படும். இது தேவேந்திர மகா முனியவர்களால் இயற்றப்பட்டது. பழைய உரையுடன் கூடியது. தெளிவான வெண்பாக்களால் அமையப்பெற்றது. பன்னிரண்டு அத்தியாயங்களை யுடையது. இதில் முக்கியமாக மக்கள்யாக்கை எடுப்பதரிதென்பதும், அஃதனித்தியமாதலால் அதனையெடுத்தோர் செய்யத்தக்க தருமங்கள் இன்னவையென்பதும், நல்வினை தீவினைகளின் விவரங்களும், சம்சாரச் சுழற்சியின் இயல்பும், வீட்டியல்பும், இன்னும் பற்பல உறுதிமொழிகளும்

---

தர்மசீலன் புக்டிபோ,

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

வெகு தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஜைன மததத்துவங்கள் விரிவாக அமைந்துள்ளன. ஜைனருக்கும் மற்றையர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியது. விலை அதிகமாவதால் வாங்குவோர்க்குக் கஷ்டமாயிருக்குமென்பதை உத்தேசித்து இதனை இரண்டுபாகமாக்கி இப்போது முதற்பாகத்தை வெளியிட்டிருக்கிறோம். இதில் ஆறு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா. 12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

## ஸ்தோத்திரச் செய்யுட்கோவை.

இது, நமது தருமசீலன் அச்சுக்கூடம் திறந்தபோது முதன் முதல் அச்சிடப்பட்ட புஸ்தகம். இதில் பல ஜைன நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தெய்வ ஸ்தோத்திரச் செய்யுட்கள் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு செய்யுளுக்கும் தெளிவான உரையும் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பதனால் கடவுள் அருள் உண்டாவதோடு இலக்கியப் பயிற்சியும் ஏற்படும். ஆதலின், இதை எல்லாரும் வரவழைத்து வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

போஸ்டில் வரவழைப்போர் ஒன்றரையணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதன் விலை அணா 1.

## மேருமந்தர புராணம் மூலமும் உரையும்.

இஃது இப்பொழுது விற்பனைக்குத் தயாராக விருக்கிறது. இந்நூல் இது வரையில் வெளி வராமையாலும், தமிழ்ப் பாஷையில் சிறப்புற்று விளங்கும் ஓர் பழய காவியமாகையாலும், ஜைன சமயக் கோட்பாடுகளைத் தெளிவாக எடுத்துரைக்கும் அரிய சாஸ்திரங்களிலொன்றாகையாலும், இதை எல்லோரும் சுலபமாகவாங்கி வாசிக்கும் பொருட்டே சஞ்சிகைகளாகப் பிரித்து இப்பொழுது முதல் இரண்டு மூன்று சஞ்சிகைகளை வெளிப்படுத்தியிருக்கிறோம்.

முதல் வால்யம் விலை அணா 6.
2-வது வால்யம் விலை அணா 5.
3-வது வால்யம் விலை அணா 8.

---

## ஜீவகசிந்தாமணி வசனம்.

இதன் முதல்வால்யம் உயர்ந்த கடிதத்தில் நல்ல விதத்தில் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதனைப் படிப்பதனால் ஜைனமதக் கோட்பாடுகளை நன்குணரலாம்; சீவகசிந்தாமணிச் செய்யுட்களின் பதப்பொருள்களையும், அலங்கார நயங்களையும் சந்தேகமறத் தெரிந்து கொள்ளலாம்; பண்டைக்காலத்தவரின் பழக்க

தர்மசீலன் புக்டிபோ,
நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

வழக்கங்களையும், சீவகனுடைய திவ்ய சரித்திரத்தையும் தருமத்தின் உயர்வையும் அறிந்து கொள்ளலாம்; இது உயர்ந்த வித்வான்களுடைய சிறந்த மதிப்புரைபோடு கூடியது. மகா மகோபாத்தியாயர் பிரம்ம ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் இதைப்பற்றி எழுதியிருப்பதாவது:—

"சீவகசிந்தாமணி வசன புத்தகத்திற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன்; இப்புத்தகம் ஜைனமத காப்பியமாகிய சீவகசிந்தாமணிச் செய்யுட்களையும், அவற்றிற்கு நச்சினார்க்கினியரியற்றிய உரையையும் தழுவி விரிவாக எழுதப் பெற்றிருத்தலின், ஜைனர்களும், மற்றையோர்களும் படித்துக் காப்பியச் சுவைகளையும், பொதுவான பல நீதிகளையும், ஜைனமதக் கொள்கைகளையும் வருத்தமின்றி அறிந்து கொள்வதற்கு இது கருவியாகுமென்றெண்ணுகிறேன். இங்ஙனம், "வே. சாமிநாதையன்" என்பதாம்.

இத்தகைய இதற்கு மிகவும் சொற்பவிலையே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் காப்பிகள் செலவாகி விட்டால், மற்ற பாகங்களை ஒவ்வொரு இலம்பகமாகப்போட்டுச் சொற்ப விலையில் வெளிப்படுத்த உத்தேசித்திருக்கிறோம். ஆதலின், ஜைன சகோதரர்களும், மற்றைய தமிழபிமானிகளும் இதனை வாங்கி, விரைவில் இந்த நூல் முழுதும் வசனமாக வெளிவரும்படி செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

## ஸ்ரீபாலன்.

### ஓர் இனிய தமிழ் நாவல்.

இஃது, ஸ்ரீபுராணத்தினின்றும் எடுத்து இனிய தமிழ் நடையில் ஆடவர், பெண்டிர், முதலியவர்கள் விரும்பி வாசிக்கத் தக்க விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இந்நாவலை வாசிப்பதால் கற்பின் மகிமை, சத் புருஷர்களின் லக்ஷணம், நட்பின் உயர்வு, சிநேகத் துரோகிகள் தீங்கடைதல், வஞ்சனைக் காரர்கள் சஞ்சலப்படல், பொறுத்தார் அரசாளுதல், பொங்கினார் காடுறைதல், வேட்டகம் புகுவாருக் குண்டாம் இழிவு, முயற்சி திருவினை யாக்குதல், இன்னாரை யொறுத்தல், அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் முதலிய பல அரிய நீதிகளை யெல்லாம் நன்குணரலாம். சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத் தான் புத்தகம் கிடைக்கும். இதன் விலை அணா 10

## உதயணன்.

இது, சிறு பஞ்ச காவியங்களிலொன்றாய்ச் செய்யுள் ரூபமாக இருந்த உதயண காவியத்தைத் தழுவி வசன நடையில் எழுதி வெளியிடப் பட்டிருக்கிறது; இதில் பல நீதிகள் அடங்கி யுள்ளன. இந்நூலை வாசிப்பதால் உதயண காவியத்தை ஒரு முறை பாடங்கேட்டது போலாகும்; இந்நூல் வாசிப்போர்க்கு மிக்க இன்பத்தை யளிக்கும்; ஆடவரும் பெண்டிரும் விரும்பி வாசிக்கத் தக்கது. இதில் சொற்ப பிரதிகளே அச்சிட்டமையால் முன்னதாக எழுதுகிறவர்களுக்குத்தான் புத்தகம் கிடைக்கும். விலை அணா 8.

---

தர்மசீலன் புக்டிபோ,

நெ. 26, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

## சுகாதார போதினி.

இது, ஒருமாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை; இதில் சுகாதாரம், வைத்தியம், மெஸ்மரிஸம், ஹிப்னடிஸம், கைத்தொழில் முதலிய விஷயங்கள் பிரசுரிக்கப்படும்.

வருஷசந்தா ரூபா ஒன்றுதான். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—சுகாதார போதினி ஆபீஸ்,
12, அப்புமேஸ்திரி தெரு, ஜி, டி, மதராஸ்.

## தருமசீலன் பிரஸ் விளம்பரம்.

நமது தருமசீலன் அச்சுக்கூடத்தில் தமிழிலும், இங்கிலீஷிலும், சகாயமான சார்ஜில் அச்சுவேலைகள் வெகு சுத்தமாகச்செய்து கொடுக்கப்படும். வெளியூரிலிருந்து, நம் ஆபீஸில் அச்சுவேலைகள் செய்துகொள்ளப் பிரியமுள்ளவர்கள், அச்சிடவேண்டிய காப்பிகளை நமக்கனுப்பி, பாரம் ஒன்றுக்கு ஒருரூபா விகிதம் புரூப் சார்ஜும் கொடுத்தால் அவ்வேலைகளை நாமே புரூப் பார்த்து முடித்துக்கொடுப்போம்.

மானேஜர்,
தருமசீலன் பிரஸ்,
1/2பாலகிருஷ்ணன் சந்து,
ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.

---

## இனம்! "கிலாபத்" இனம்!! இனம்!!

இஸ்லாம் மார்க்க உண்மைகளையும் ராஜீய தேசிய விஷயங்களையும் தன்னுட்கொண்டு, ராயல் 8-பக்கங்கொண்ட பெரிய ஸைஸில் ஒவ்வொரு சஞ்சிகையும் 48-பக்கங்களுடன் நல்ல உயர்தர கிளேஸ் காகிதத்தில் மிக நேர்த்தியாகச் செந்தமிழில் அச்சிடப்பட்டு ஒவ்வொரு மாதம் முதல் தேதியிலும் வெளியாகும் "தாருல் இஸ்லாம்" என்னும் மாதப் பத்திரிகைக்கு 1923-ல் சந்தாதாரராகச்சேரும் ஒவ்வொரு புதிய நண்பருக்கும் ஒவ்வொரு கிலாபத் புத்தகம் இனமாகக் கொடுக்கப்படும். கொஞ்சம் பிரதிகளேயிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்.

வருஷ சந்தா ரூ 3-0-0. அயல்நாடுகளுக்கு ரூ 4-0-0.

"தத்துவ இஸ்லாம்" நான்காம் கமலம் 480-பக்கங் கொண்ட பைண்டு புத்தகம் விலை ரூ. 3—0—0.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்,
நாச்சியார்கோவில், (தஞ்சை ஜில்லா.)

## சுகானந்த

# அயத்தங்க திராவகம்.

அனுபவமானது ! பிரசித்தி பெற்றது!! சஞ்சீவி போன்றது !!!

## இதன் முக்கிய குணங்களாவன:--

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாய்க் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது கெட்ட சகவாசத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் தீரக்கூடிய வியாதிகள் அநேகம். குணங்கள் பலவாம்.

நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல் கை கால் காந்தல் இவை தீரும். முகவசீகரம் உண்டாகும். இது தேக அசதியையோட்டும். ஜீரண சக்தியையும் நல்லபசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும். நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷய ரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாதபித்த சிலேத்துமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவற்றைத் தீர்க்கும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15-நாள் சாப்பிட்டால் இது, இணையில்லாத ஆனந்தத்தைத்தரும். இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறுமருந்தே கிடையாது. 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது. தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது.

20-நாள் மருந்து ரூ. 1 0 0     40-நாள் மருந்து ரூ. 1 12 0

---

ஆதிலட்சுமி கம்பெனி,

½ பாலகிருஷ்ணன் சந்து, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி. சென்னை.